விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 10 சனிக்கிழமை (27.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 312

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4239)

# அரசியல் அதிரடி
# மகிந்த பிரதமர்

(கொழும்பு) இலங்கை அரசியலில் திடீர் திருப்பமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய பிரதமராக பதவியேற்றுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு பதவியேற்றுக் கொண்டதாக ஜனாதிபதி செயலகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. (23-ம் பக்.)



## ரணில் விக்கிரமசிங்கவே நாட்டின் பிரதமராவார்!
### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவே இந்த நாட்டின் பிரதமர் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டிருந்தார். 24

### மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றதை அடுத்து
## ஜனாதிபதி செயலகத்தை சுற்றி பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ நேற்று பிரதமராக பதவி பிரமாணம் செய்து கொண்டுள்ள நிலையில் ஜனாதிபதி 23

## கூட்டு எதிர்க்கட்சிக்குள் பிளவுகள் இல்லை!
### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சி எப்போதும் பிளவுபடாது என தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொஸ்கொட பிரதேசத்தில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார். 23

## தகவல் அறியும் மையத்தை வடமாகாணத்தில் அமையுங்கள்
### அதிகாரிகளுக்கு ஆளுநர் கூரே பணிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கில் தகவல் அறியும் மையம் ஒன்றினை அமைக்குமாறு அதிகாரிகளுக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே பணிப்புரை விடுத்துள்ளார். வடக்கில் விற்பனை செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை தொடர்பில் அறிந்து கொள்வதற்காக 23

### புதிய அமைச்சரவை குறித்து
## ஜனாதிபதி மைத்திரி - பிரதமர் மகிந்த பேச்சு

(கொழும்பு)

நடைமுறையிலிருந்த அமைச்சரவையை அதன் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலைத்துள்ள நிலையில் புதிய அமைச்சரவை விரைவில் நியமிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை தொடர்பான கலந்துரையாடலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் 23

### பிரதமரானார் மகிந்த
## தென்பகுதியில் பட்டாசு வெடித்து மக்கள் ஆரவாரம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு பிரதமராக பதவியேற்ற நிலையில், தென்னிலங்கையில் மக்கள் உச்சகட்ட மகிழ்ச்சியில் இருக்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், தென்னிலங்கை மக்கள் 24

## பெரும்பான்மையை நிரூபித்துக்காட்டுவேன் ரணில் பகிரங்க சவால்

(கொழும்பு)

வேறு எவரும் தன்னை விட பெரும்பான்மை கொண்டிருந்தால் அவர்கள் நாடாளுமன்றத்தில் அதை வெளிக்காட்டலாம் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

19-வது அரசியலமைப்பு திருத்தத்தின் 42-வது சரத்தின்படி தற்போதும் பிரதமராக நானே இருக்கின்றேன் என்றும் அவர் 23

## சமகால அரசின் பிரதமர் நானே; ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு!

(கொழும்பு)

சமகால அரசாங்கத்தின் பிரதமராக நானே உள்ளேன் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். எனினும் நானே நாட்டின் பிரதமர் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சட்டத்திற்கு விரோதமான முறையில் மகிந்த பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளதாக ரணில் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசியலமைப்பு நடைமுறைகளை மீறி மகிந்தவை பிரதமராக ஜனாதிபதி மைத்திரிபால 23



## அலரி மாளிகையில் ரணில் தலைமையில் ஐ.தே.க ஆலோசனை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் நேற்றிரவு கூடியுள்ளனர்.


அரசியலமைப்புக்கு முரணாக பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்ஷவை 23

## சம்பந்தனின் எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு ஆபத்து?

(கொழும்பு)

புதிய பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றுள்ள நிலையில் சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரைநாளும் அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்பட்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமை 23



## பதவி நீக்கப்பட்டதை ரணிலுக்கு அறிவித்த ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கியுள்ளதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்றிரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அரசியலமைப்பின் 42(4)-வது பிரிவின் கீழ் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு 23

## அரசியலமைப்புக்கு விரோதமான சட்டபூர்வமற்ற ஆட்சிக் கவிழ்ப்பு
### மங்கள சமரவீர கடும் ஆதங்கம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளமை அரசியலமைப்புக்கு விரோதமானதும் சட்டபூர்வமற்றதும் ஜனநாயக விரோத ஆட்சிக் கவிழ்ப்புமாகும் என்று மங்கள சமரவீர தனது கடும் ஆதங்கத்தை தெரிவித்துள்ளார். 24


← Tweet
Mangala Samaraweera
@MangalaLK
The appointment of @PresRajapaksa as the Prime Minister is unconstitutional & illegal. This is an anti democratic coup. #lka
8:38 p.m. · 26 Oct 18

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மகிந்தவின் வெற்றியையடுத்து
# வீட்டை முற்றுகையிடும் மக்கள் கூட்டம்

(கொழும்பு)

புதிய பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவி பிரமாணம் செய்துள்ளமையால் நாட்டில் பெரும் பரபரப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

மகிந்தவின் பதவியேற்பு தொடர்பான தகவல்கள் உத்தியோகபூர்வமாக வெளியானதும், கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன்னால் பாரிய மக்கள் கூட்டம் ஏற்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், தொண்டர்கள் என பலரும் அந்த இடத்தில் குவிந்துள்ளனர்.

பரபரப்பான சூழ்நிலையில் இன்றைய தினம் அமைச்சரவையில் பாரிய மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்து கொண்டமையை அடுத்து, நாட்டின் பல பாகங்களிலும் வெற்றிக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் பெரும் சோகத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.புதிய பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவி பிரமாணம் செய்துள்ளமை நாட்டில் பெரும் பரபரப்பு நிலை ஏற்பட்டுள்ளது.(ம)

## அம்பாந்தோட்டை மத்தேகொட பகுதியில்
# துப்பாக்கி முனையில் வங்கியில் ஒரு கோடி ரூபாய் பணம் கொள்ளை

(அம்பாந்தோட்டை)

மத்தேகொட பிரதேசத்தில் உள்ள அரச வங்கிக்கு காரில் வந்த மூவர் அடங்கிய கும்பல் பணத்தையும் சி.சி.டி.வி. பதிவுக் கருவியையும் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தி இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளதுடன், சுமார் ஒரு கோடி ரூபாய் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதுடன் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் மத்தேகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை அம்பாந்தோட்டை பகுதியில் உள்ள கிராமிய வங்கி ஒன்றில் இருந்து 4 இலட்சத்திற்கும் அதிகமான பணம் நேற்று முன்தினம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

முகத்தை மூடியவாறு தலைக்கவசம் அணிந்து கொள்ளைக்காரர் ஒருவர் துப்பாக்கியை காட்டி பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேகநபர் வங்கிக்குள் நுழைந்து ஊழியர்களுக்கு துப்பாக்கியை காட்டி பணத்தை கொள்ளையடித்து செல்லும் விதம் வங்கியில் உள்ள சி.சி.ரி.வி. கமராக்களில் பதிவாகி இருந்தது.

இதேவேளை குறித்த சந்தேகநபர் வங்கியில் சேவையாற்றும் பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்க சங்கிலி ஒன்றையும் பறித்துச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அம்பாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கை அரசியல் அதிரடிக்கு
# முக்கியத்துவம் கொடுத்த சர்வதேச ஊடகங்கள்

(கொழும்பு)

கொழும்பு அரசியலில் நேற்றிரவு ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் குறித்து சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பிரதமராக பதவியேற்றுக் கொண்டார்.

இந்த விடயத்தினை முதன்மைப்படுத்தி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த வகையில், பிபிசி, டைம்ஸ் ஒப் இந்தியா, மற்றும் NDTV உள்ளிட்ட ஊடகங் கள் குறித்து விடயத்தினை முதன்மை செய்தியாக வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## படிக்கவில்லை என்ற காரணத்தால்
# மாமனின் தாக்குதலுக்கு இலக்கான 6 வயது சிறுவன் வைத்தியசாலையில்

(கிளிநொச்சி)

படிக்கவில்லை என்ற காரணத்திற்காக 6 வயதுச் சிறுவன் மீது மாமன் வயர் கொண்டு தாக்கியதில் மிகவும் பாதிக்கப்பட்ட சிறுவன் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

குறித்த சம்பவத்தில் கிரிசுட்டகுளம், கனகராயன்குளம், பகுதியை சேர்ந்த 6 வயதுச் சிறுவனே இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

குறித்த சிறுவன் தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரும் அற்ற நிலையில் குறித்த சிறுவனை மாமனே கவனித்து வரும் நிலையில் வீட்டில் கல்வி கற்கவில்லை என்கின்ற காரணத்தினால் வயரினால் தாக்கியுள்ளார். இதன் காரணமாக குறித்த சிறுவனின் உடலில் பலமான அடிகாயங்கள் காணப்படும் நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு குறித்த சிறுவன் வயரினால் தாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தற்போது கனகராயன்குளம் பொலிஸார் மற்றும் மாவட்ட சிறுவர் நன்நடத்தை திணைக்களம் ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் குறித்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## தந்தை மகனுக்கிடையில் மோதல்
# தந்தை சடலமாக மீட்பு மகனுக்கு கத்திக்குத்து

(கரணவாய்)

மகனுக்கும் தந்தைக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் மகனை கத்தியால் குத்தி காயப்படுத்திய தந்தை மறுநாள் காலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

வதிரி, தேவரையாளி பகுதியில் இடம்பெற்ற இவ் அதிர்ச்சியூட்டும் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு தந்தைக்கும் மகனுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாகவும் இதில் 40 வயதுடைய மகனை தந்தையார் பாதணி தைக்கும் கத்தியால் குத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த மகன் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து தந்தையார் பின்புறமாக உள்ள வீட்டிற்குள் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்று வெள்ளிக்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலத்தில் முதுகுப் புறத்தில் காயம் காணப்பட்ட நிலையில் கரவெட்டி மரணவிசாரணை அதிகாரி பாஸ்கரனின் உத்தரவிற்கு அமைய சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் அவர் கழுத்துப் பகுதியில் கயிறு இறுக்கி மரண மடைந்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ம-60)

# நெருக்கடியை எதிர்கொள்வோம் மனோ கணேசன்

(கொழும்பு)

எழுந்துள்ள அரசியல் நெருக்கடி நிலையை எதிர்கொள்ள தாம் தயாராக உள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

புதிய பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற நிலையிலே அவர் இதனை அறிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிகள் ஆறு பேரும் கூட்டணியாக ஓரணியில் ஒன்றாக தேசிய ரீதியாக எழுந்துள்ள நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ள தீர்மானித்துள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது முகநூல் தளத்தினூடாக அவர் இதனை அறிவித்துள்ளார்.(ம)


# முகாமையாளர் தேவை



வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் முகாமையாளராக கடமையாற்றுவதற்கு பொருத்தமான ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தங்குமிடவசதி செய்து தரப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை சுயவிபரத்துடன் 05.11.2018ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தலைவர், வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயப் பரிபாலன சபை, வற்றாப்பளை, முள்ளியவளை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**மு.குகதாசன்,**
**தலைவர்,**
**வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயப் பரிபாலன சபை**

**வற்றாப்பளை,**
**முள்ளியவளை.** (சி-4245)



**காரைநகர்**
**கிழவன்காடு கலாமன்றம்** நடாத்தும்
**பரிசளிப்பும் கலைநிகழ்வும் அழைப்பு**

இடம்:நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்
காலம்:28.10.2018 ஞாயிற்றுக்கிழமை
பி.ப 2.00 மணி

தலைவர்
திரு.**ந.சோதிநாதன்** அவர்கள்
(ஸ்தாபகரும் தலைவரும், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

பிரதம விருந்தினர்
திரு.திருமதி R.T.**ஜெயசீலன் லங்கினி** தம்பதியினர்
(ஆணையாளர், யாழ்.மாநகர சபை)

சிறப்பு விருந்தினர்
காரை திரு.K.**சத்தியபாலன்** அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர், மடுவலயம், மன்னார்)
திரு P.**பிரபாகர்** அவர்கள்
(உதவிப் பதிவாளர் நாயகம், வடக்கு வலயம்)

துறைசார் விருந்தினர்
நாதஸ்வர இசையருவி, கலாபூசணம் V.K.பஞ்சமூர்த்தி அவர்கள்
**ஸ்ரீமதி.அருட்செல்வி கிருபைராஜா** அவர்கள்
(முன்னாள் தலைவர், முதுநிலை விரிவுரையாளர், நடனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

கௌரவ விருந்தினர்
கலைமாடக்கோன் திரு.திருமதி **சிவஞானம் உமாதேவி** தம்பதியினர்
(கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

**கலாமன்ற மாணவர்கள் வழங்கும் நிகழ்வுகள்**
* பேச்சு
* பண்ணிசை
* குழு இசை
* மிருதங்க இசை
* வயலின் இசை
* வீணை இசை
* அரங்க ஆற்றுகை
* நாட்டியாஞ்சலி

(சி-4246)

**சிறப்புப் பட்டிமண்டபம்**
இன்றைய மனித வாழ்விற்கு பெரிதும் அவசியமானது!

அறமே!
திரு.கு.பாலசண்முகன் (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை)
திரு.கி.சிவாம்சன் (விஞ்ஞானபீட மாணவன்)
திரு.ந.ஐங்கரன் (விவசாய அமைச்சு வட மாகாணம்)

பொருளே!
திரு.பராநந்தீஸ் (அமைப்பாளர், அகில இலங்கை இளங்கோ கழகம்)
திரு.கு.கோபிராஜ் (மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
திரு.இ.சர்வேஸ்வரா (சிரேஷ்ட உதவிப்பதிவாளர், ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்)


நடுவர்
காரை.தமிழருவி த.சிவகுமாரன் B.A (Hons)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
**கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்**

### ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் வேண்டும்

# போர்க்களமானது

# பொகவந்தலாவ நகரம்



(ஹற்றன்)

**மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் கோரி நேற்றுக்காலை 8 மணியிலிருந்து முற்பகல் 11 மணிவரை ஹற்றன் பொகவந்தலாவ பிரதான வீதியை மறித்தும் டயர்களை ஏறித்தும் பொகவந்தலாவ நகரில் பாரிய கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

இந்த ஆர்ப்பாட்டத்தில்பொகவந்தலாவ, கொட்டியாகலை ,பொகவான, குயினா, ஜெப்பல்டன், பி.எஸ், டி.பி.செல்வகந்தை ஆகிய தோட்டப்பகுதிகளை சேர்ந்த 2000இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

எங்களுக்கு அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கறுப்பு கொடிகளை ஏந்தியும், அவ்வாறு வழங்க முடியாவிட்டால் தொழில் அமைச்சர்பதவி விலக வேண்டும்என கோஷங்களை எழுப்பியும் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பொகவந்தலாவ வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுவர்த்தகர்களும்வாகன சாரதிகளும் கலந்து கொண்டனர்.

தோட்ட தொழிலாளர்களுக்கு 25 கட்டாய வேலை நாட்கள்மற்றும்கூட்டு ஒப்பந்தம்தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும்எனவும்கோரிக்கை விடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தினால் சுமார் மூன்று மணித்தியாலங்கள் போக்குவரத்து தடைப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ராம் மற்றும் நகுலனுக்கு கோத்தபாய பணம் வழங்கினார்

### அமைச்சர் சம்பிக்க கொதிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ராம் மற்றும்நகுலன் ஆகியோருக்கு, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் சம்பளம் வழங்கப்பட்டதாக, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.



கொலன்னாவயில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய வர்த்தகத் தொகுதிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில், அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம்வினவிய போது, புலிகள் இயக்கத் தலைவர்கள், கிழக்கு மாகாண மக்களின் வாக்குகளைத் தனக்கு சேகரித்துக் கொடுப்பதாகக் கூறியிருந்த நிலையிலேயே இந்தப் பணம் வழங்கப்படுவதாக பதிலளித்தாரென்றும், அமைச்சர் சம்பிக்க தெரிவித்தார்.

கிழக்கில் பாரிய படுகொலைகளைச் செய்த ராம் மற்றும் நகுலன் போன்ற புலிகள் இயக்கத் தலைவர்களுக்கு, கோத்தபாய ராஜபக்ஷவால் சம்பளம் வழங்கப்பட்டதாகவும் கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாபன், ராம், நகுலன் போன்றோர், மொனராகலை மற்றும் கதிர்காமத்தில், நூற்றுக்கணக்கான பொதுமக்களைப் படுகொலை செய்தவர்கள் என்றும் அவ்வாறானவர்கள் இன்றும் உயிரோடு உள்ள நிலையில், ராஜபக்ஷ குடும்பத்தினரால், தீவிரவாதிகளுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டதாகவும் குற்றஞ் சாட்டினார். (இ-7)



## கொழும்பு கொள்கலன் முனையம் இந்தியாவுக்கு வழங்கப்படாது!

### ஜனாதிபதி மைத்திரி உறுதி

(கொழும்பு)

கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கு விட்டுக் கொடுப்பதில்லை என்பதில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடாப்பிடியான நிலைப்பாட்டில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் இந்தநிலைப்பாட்டை, இலங்கை துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க, தெளிவுபடுத்தினார்.

"கொழும்பு கிழக்கு கொள்கலன் இறங்குதுறையை, இலங்கை துறைமுக அதிகார சபையே வைத்திருக்கும்.

கடந்த ஆண்டு, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ்"க்கும், அனைத்துலக வணிக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுக்கும் இடையில்செய்து கொள்ளப்பட்ட பொருளாதார ஒத்துழைப்புக் குறித்த புரிந்துணர்வு உடன்பாட்டில், கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்வது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

பொதுவாக கொழும்பு துறைமுக கொள்கலன் முனையத்தை கூட்டாக அபிவிருத்தி செய்வது என்றே கூறப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுகத்தின்மேற்கு கொள்கலன்முனையத்தை இந்தியா தாராளமாக அபிவிருத்தி செய்யலாம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அண்மைய டில்லி பயணத்தின் போது, ஜனாதிபதி மைத்திரியின் இந்த நிலைப்பாட்டை, இந்தியப் பிரதமருக்கு தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க டில்லியில் இருந்து நாடு திரும்பிய பின்னர், அமைச்சரவைப் பத்திரத்தின் மீது முடிவெடுப்பதை ஒருவாரம் பிற்போடுமாறு, கோரினார்.

இந்த விடயம் தொடர்பாக இந்தியத் தூதுவரை பிரதமர் சந்திக்க வேண்டியிருக்கிறது. இந்தியத் தூதுவரிடம் எமது நிலைப்பாட்டை தெரியப்படுத்துவோம்.

இந்தியாவின் உதவியுடன், மேற்கொள்ளப்படும் திட்டங்களில் தாமதம் குறித்து இந்தியப் பிரதமர் கவலை வெளியிட்டுள்ள நிலையில், இந்தத் திட்டங்களைத் துரிதப்படுத்தும், நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அமைச்சர்களே முன்னெடுக்க வேண்டும்" என்றும்அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

#### 1000 ரூபா பெற்றுக்கொடுப்பேன்; இல்லையேல்

## பதவியை இராஜினாமா செய்வேன் ஆறுமுகன் தொண்டமான் அறிவிப்பு



(கொழும்பு)

இம் மாதம் 30 ஆம் திகதிக்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான அடிப்படை சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வேன்என்று பாராளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் அறிவித்துள்ளார். (இ-7)

## வீதியில் பயணித்த ஆட்டோ திடீரென தீப்பிடித்து எரிந்தது

### ஏழாலையில் நேற்றுக்காலை சம்பவம்





(புன்னாலைக்கட்டுவன்)

வீதியில் சென்று கொண்டிருந்த ஆட்டோ ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்து நாசமானது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஏழாலை வடக்கு சிவகுரு கடையடியில் இடம்பெற்றது.

பயணித்துக்கொண்டிருந்த ஆட்டோ திடீரென எரிவதனைக் கண்டு வீதியால் சென்றவர் கூச்சலிட்டதும் சாரதி மற்றும் ஆட்டோவின் உள்ளே இருந்தவர்கள் உடனடியாக கீழே இறங்கியுள்ளனர். இதனால் இவர்களுக்கு காயங்கள் ஏதுவும் ஏற்படவில்லை.

வீதியால் சென்றவர்கள் மற்றும்அயலவர்கள்ஒன்று சேர்ந்து தண்ணீரூற்றி தீயினை அணைத்துள்ளனர். எனினும் ஆட்டோ முற்றாக எரிந்து சேதமடைந்தது.

இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-78)

## போர்க்குற்றச்சாட்டுக்குள்ளான அமுனுபுரவை திருப்பியழைக்க இலங்.இராணுவம் இணக்கம்

### ஐ.நாவே தெரிவு செய்தது எனவும் விளக்கம்

(கொழும்பு)

மாலியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றும் 200 இலங்கை இராணுவத்தினரின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றும், லெப்.கேணல் கலன அமுனுபுரவை, ஐநாவின் கோரிக்கையை ஏற்று திருப்பி அழைத்துக் கொள்வதாக, இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில், லெப்.கேணல் கலன அமுனுபுரவை உடனடியாகத் திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு கடந்த வெள்ளிக்கிழமை ஐ.நா. செயலகம் இலங்கை அரசாங்கத்திடம் கோரியிருந்தது.

"ஐ.நாவின் ஆலோசனைக்கு அமைய, ஐ.நா. அமைதிப் படைக்கு அனுப்பப்படும் இலங்கை படையினரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து, மனித உரிமை ஆய்வுக்குட்படுத்தும், செயல்முறை 2017 ஆம் ஆண்டு, ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே, 2016இல், லெப்.கேணல் கலன அமுனுபுரவை மாலிக்கு அனுப்ப ஐ.நா. இணங்கியிருந்தது.

நான்கு இராணுவ அதிகாரிகளின் பட்டியலில் இருந்து, ஏனைய மூவரையும்நீக்கி விட்டு, ஐ.நாவே லெப்.கேணல் கலன அமுனுபுரவை தெரிவு செய்திருந்தது.



இவரைத் திருப்பி அழைத்துக் கொள்ளும் விடயத்தில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எந்தத் தொடர்பும் இல்லை" என்றும் இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-7)

# புனேயில் வீசுமா ஹோலி 'புயல்'

## இந்தியா – மே.தீவுகள் இன்று 3ஆவது மோதல்


விராட் ஹோலி

பயிற்சியின்போது குல்தீப், ஜடேஜா

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் மோதும் மூன்றாவது ஒருநாள் போட்டி இன்று புனேயில் நடக்கிறது. கடந்த போட்டியில் சதம் விளாசிய ஹோலி மீண்டும் ஓட்ட மழை பொழிய வாய்ப்பு உள்ளது. பந்துவீச்சில் பும்ரா, புவனேஷ்வர் திரும்புவதால், இந்திய அணி மீண்டும் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா சென்றுள்ள மே.தீவுகள் அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி சமனிலையானது.

இநநிலையில் இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது போட்டி இன்று புனேயில் உள்ள மகாராஷ்டிரா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடக்கிறது.

**துடுப்பாட்டம் நம்பிக்கை**

இந்திய அணிக்கு துடுப்பாட்டம்தான் பலம். தொடக்க வீரர் ஷிகர் தவான் (4, 29 ஓட்.,) முதல் இரு போட்டிகளிலும் ஏமாற்றினார். குவகாத்தியில் சதம் விளாசிய ரோகித் சர்மா, அணித் தலைவர் ஹோலி (140, 157) சுப்பர் 'போர்மில்' உள்ளனர்.

ஒருநாள் அரங்கில் பத்தாயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை அதிவேகமாக எட்டிய ஹோலி, இன்றும் மே.தீவுகள் அணிக்கு எதிராக 'ஹட்ரிக்' சதம் அடிப்பார் என நம்பலாம்.

நான்காவது இடத்தில் வரும் அம்பதி ராயுடுவும் (73) அரைச்சதம் அடித்துள்ளார். இவர்கள் மீண்டும் துடுப்பாட்டத்தில் விளாசினால் மே.தீவுகள் அணிக்கு இமாலய இலக்கை நிர்ணயிக்கலாம். 'சீனியர்' தோனி (20 ஓட்.,) இன்று தன் மீதான எதிர்பார்ப்பை நிறைவேற்றினால் நல்லது.

**'இருவர்' வருகை**

முதல் இரு போட்டிகளில் 322, 321 ஓட்டங்களை வாரி வழங்கியதால் வேகப் பந்துவீச்சிற்கு பலம் சேர்க்கும் வகையில் முன்னணி வீரர்கள் பும்ரா, புவனேஷ்வர் குமார் மீண்டும் இந்திய அணிக்கு திரும்பியுள்ளனர்.

உலக கிண்ணத் தொடருக்கு முன் இன்னும் இந்தியா 16 போட்டிகளில் மட்டும் பங்கேற்க உள்ள நிலையில், இது சக வீரர்களுக்கு உற்சாகம் கொடுக்கலாம். இதனால் உமேஷ் இன்று களமிறங்குவது சந்தேகம் தான்.

மைதானத்தில் பனிப்பொழிவு இருந்த போதும் 'சுழலில்' குல்தீப் (3 விக்.,) பந்தை சிறப்பாக சுழற்றினார். சகால் பரவாயில்லை என்றாலும் ஜடேஜா விக்கெட் வீழ்த்தாதது பெரிய குறை. இவர் மீண்டும் தன்னை நிரூபித்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

**ஹெட்மயர் மிரட்டல்**

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்டத்தில் ஹோப் (32, 123 ஓட்.,), 21 வயதான ஹெட்மயர் (106, 94 ஓட்.,) முதுகெலும்பாக திகழ்கின்றனர். கடந்த போட்டியில் 'நடுத்தர வரிசையில்' இவர்களது கூட்டணிதான் போட்டி சமனிலையாக உதவியது.

அதேநேரம் ஹேம்ராஜ், பவெல், அனுபவ சாமுவேல்ஸ் என பலரும் துடுப்பாட்டத்தில் தடுமாறுகின்றனர். பந்துவீச்சைப் பொறுத்த வரையில் அணித் தலைவர் ஹோல்டர், கீமர் ரோச் பெரியளவில் மிரட்டுவதில்லை. இரண்டு போட்டியில் தேவேந்திர பஷூ, ஒரு விக்கெட் தான் வீழ்த்தினார். முதல் இரு போட்டியில் 11 முதல் 40 ஓவர் இடைவெளியில் இரண்டு விக்கெட் மட்டும் வீழ்த்தியது பலவீனம்.

**மழை வருமா?**

மூன்றாவது போட்டி நடக்கும் புனேயில் இன்று வானம் தெளிவாக காணப்படும். வெப்பநிலை அதிகபட்சம் 32, குறைந்த பட்சம் 22 டிகிரி செல்சியஸ் இருக்கும். மழை வர வாய்ப்பில்லை. இரவில் பனிப்பொழிவு காணப்படும்.

**ஆடுகளம் எப்படி**

கடந்த முறை இங்கு நடந்த போட்டியில் பந்துவீச்சாளர்கள் சாதிக்க, நியூசிலாந்துக்கு, (230/9) எதிரான போட்டியில் குறைந்த ஓட்டங்கள் (இந்தியா 232/4) தான் எடுக்கப்பட்டன. இம்முறை ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இரண்டு வெற்றி**

புனே மைதானத்தில் இந்திய அணி மூன்று போட்டிகளில் பங்கேற்றது. 2017ல் இங்கிலாந்து, நியூசிலாந்தை வென்ற இந்திய அணி, அவுஸ்திரேலியாவுக்கு (2013) எதிராக மட்டும் தோற்றது.

# பிராவோ ஓய்வு

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகலதுறை வீரர் டுவைன் பிராவோ (வயது-35), கடந்த 2004ல் கயானாவில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டி மூலம் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் காலடி வைத்த இவர், 40 டெஸ்ட் (2200 ஓட்., 86 விக்கெட்), 164 ஒருநாள் (2968 ஓட்., 199 விக்கெட்), 66 சர்வதேச 'ரி20' (1142 ஓட்., 52 விக்கெட்) போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

கடைசி கட்ட ஓவர்களை துல்லியமாக பந்துவீசும் டுவைன் பிராவோ, கடைசியாக 2016ல் அபு தாபியில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான 'ரி20' போட்டியில் விளையாடினார். அதன்பின் கரீபியன் பிரிமியர் லீக், பிக்பாஷ், ஐ.பி.எல்., உள்ளிட்ட உள்ளூர் 'ரி20' தொடர்களில் மட்டும் விளையாடி வருகிறார்.

இந்நிலையில் இவர், சர்வதேச போட்டிகளில் இருந்துஓய்வுபெறுவதாகதெரிவித்துள்ளார். இருப்பினும் உலகெங்கிலும் நடக்கும் உள்ளூர் 'ரி20' போட்டிகளில் தொடர்ந்து விளையாடப் போவதாக கூறினார்.

இதுகுறித்து பிராவோ கூறுகையில், "அனைத்து விதமான போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுகிறேன். இருப்பினும் உள்ளூர் 'ரி20' போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்பேன். கடந்த 2004ல் லோர்ட்சில் நடந்தபோட்டியில்மேற்கிந்தியத் தீவுகளுக்காக டெஸ்டில் அறிமுகமானதை என்றும் மறக்க முடியாது. எனது வெற்றி, தோல்வியின் போது ஊக்கப்படுத்திய சக வீரர்கள், நண்பர்கள், உறவினர்கள், ரசிகர்கள் என அனைவருக்கும் நன்றி," என்றார்.


பிராவோ

# பங்களாதேஷ் ஹட்ரிக் வெற்றி



வெற்றிக் கிண்ணத்துடன் பங்களாதேஷ் அணியினர்

சிம்பாப்வே அணிக்கு எதிரான 3 ஆவது ஒரு நாள் போட்டியில் சவுமியா சர்கார், இம்ருல் கெய்ஸ் சதம் கடந்து கைகொடுக்க பங்களாதேஷ் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் 'ஹட்ரிக்' வெற்றியை பெற்றது.

பங்களாதேசுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது.

முதலிரு போட்டிகளின் நிறைவில் பங்களாதேஷ் அணி தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி நேற்று சிட்டகொங்கில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. சிம்பாப்வே அணிக்கு அணித் தலைவர் ஹமில்டன் மசகட்சா (0) ஏமாற்றினர். பிரண்டன் ரெய்லர் (75) அரைச்சதம் கடந்தார். சிக்கந்தர் ராஜா (40), பீற்றர் மூர் (28) ஓரளவு கைகொடுத்தனர். அபாரமாக ஆடிய சீன் வில்லியம்சன் (129*) சதம் கடந்தார்.

சிம்பாப்வே அணி 50 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்கள் எடுத்தது.

**சௌமியா சர்கார் சதம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு லிட்டன் தாஸ் (0) ஏமாற்றினார். பின் இணைந்து சிம்பாப்வே பந்துவீச்சை எளிதாக சமாளித்த இம்ருல் கெய்ஸ், சௌமியா சர்கார் சதம் கடந்தனர். இரண்டாவது விக்கெட்டுக்கு 220 ஓட்டங்கள் சேர்த்த போது சவுமியா சர்க்கார் (117) ஆட்டமிழந்தார். அபாரமாக ஆடிய இம்ருல் கெய்ஸ் (115) நம்பிக்கை கொடுத்தார்.

பங்களாதேஷ் அணி 42.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. முஷ்பிகுர் ரஹிம் (28), மொஹமட் மிதுன் (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஏற்கனவே முதலிரண்டு போட்டியில் வெற்றி பெற்றிருந்த வங்கதேச அணி, தொடர்ந்து 3 ஆவது வெற்றியை பதிவு செய்து, தொடரை 3-0 என முழுமையாக வென்றது.

போட்டியின் ஆட்டநாயகனாகவும் போட்டித் தொடரின் நாயகனாகவும் பங்களாதேஷின் இம்ருல் கெய்ஸ் தெரிவானார்.

# புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வரும் என மக்கள் நம்பவில்லை

## நாடாளுமன்றில் டக்ளஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)



அரசியல் உரிமைகள் தொடர்பான பிரச்சினைக்கு புதிய அரசியல் யாப்பின் ஊடாக ஒரு நிரந்தரத் தீர்வு கிட்டும் என்கின்ற நம்பிக்கை இப்போது எமது மக்களிடமிருந்து அகன்று வருவதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலும் கூறியே ஆகவேண்டும். இதைத்தான் நான் 'வரும், ஆனால் வராது' எனக் கூறி வருகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற நிதி, மதுவரி மற்றும் உற்பத்தி வரி சட்டமூலங்கள் தொடர்பான விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த புதிய அரசியல் யாப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக - அல்லது அதில் அக்கறையுள்ளவர்களாகக் கூறிக்கொள்கின்ற தமிழ் அரசியல்வாதிகள், புதிய அரசியல் யாப்பு 'இதோ முடிந்துவிட்டது, அதோ முடிந்து விட்டது' - 'இதோவருகிறது, அதோ வருகிறது' எனக் கூறிக் கூறியே இந்த அரசாங்கத்தின் முக்கால்வாசி காலத்தை வீணடித்து விட்டார்கள்.

இப்போது, ஒற்றையாட்சி என்றால்என்ன? ஒருமித்த நாடு என்றால்என்ன? என்பது பற்றி எமது மக்களுக்கு முன்பள்ளிகளை நடத்திக் கொண் டிருக்கிறார்கள்.

இது, சிங்கள மக்களைத் திருப்திப்படுத்திக் கொண்டு, தமிழ் மக்களை ஏமாற்றுகின்றதும், தமிழ் மக்களைத் திருப்திப்படுத்திக் கொண்டு சிங்கள மக்களை ஏமாற்றுகின்றதுமான ஒரு கபடநாடகமாகும். இந்த ஏமாற்று நாடகம் எத்தனை மேடைகளில் அரங்கேற்றப்பட்டாலும், இதனால் இறுதிவரையில் ஏமாறப்போவது இந்த ஏமாற்றுக்காரர்களுக்கு வாக்களித்த எமது தமிழ் மக்களே என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்டவிரும்புகின்றேன்.

இப்படியே எமது மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டக் கொண்டு இருக்கிறார்கள். இவ்வாறு எமது மக்கள் ஏமாற்றப்படுவதுஅரசியல் உரிமைகள் தொடர்பிலான விடயத்தில் மட்டுமல்ல என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

**சொர்க்கம் திருமண சேவை**

அமெரிக்காவில் வசிக்கும் 30 வயதுடைய செவ்வாய் குற்றம் உள்ள பட்டதாரி மணமகனுக்கு தகுந்த அழகான மணமகளைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு
TP& Viber: 0014166661855 & 0016475043336







## “விலைவாசி குதிரை வேகம்; சம்பளம் ஆமை வேகம்”

# கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன் ஆசிரிய மாணவர்கள் நேற்றுப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கையை வலியுறுத்தி யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்களால் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று கலாசாலை முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.





போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரிய மாணவர்கள் கறுப்புப்பட்டிகளை அணிந்தவாறு ஆயிரம் ரூபாய் வேதனம் பெற இத்தனை வேதனைகளா? கொழுந்துக் கூடையின் சுமையை விட பேச்சு வார்த்தை சுமையாக இருக்கிறது. விலைவாசி குதிரை வேகம். சம்பளம் ஆமை வேகம் என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் 500 பேர் வரையில் கலந்து கொண்டனர். (இ-9)



யாழ்.இமையாணன் அ.த.க.வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாடசாலையின் ஓய்வு நிலைய பிரதி அதிபர் திருமதி.கமலாதேவி பவளராசா கலந்து சிறப்பித்தார். விருந்தினருக்கு பாடசாலை அதிபர் இ.சிவசங்கர் நினைவுப்பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## வருடாந்த பரிசளிப்பு விழா

(கரணவாய்)

மாமுனை அ.த.க.பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.சந்திரமோகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர்.ச.திரவியராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7-60)

## வடஇந்து ஆரம்பப்பாடசாலை கற்றல், கற்பித்தல் கண்காட்சி

(கரணவாய்)

வட இந்து ஆரம்பப் பாடசாலையின் கற்றல்,கற்பித்தல் தொடர்பான கண்காட்சி நாளை மறுதினம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை அதிபர் த. ரவீந் திரன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-7-60)



தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம் மற்றும் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் உலக உணவு தினவிழாவும் பயனாளிகளுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வும் உரும்பிராய் காளியம்பாள் திருமண மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் இளைஞர் செயற்றிட்ட இணைப்பாளர் லக்சிறி மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கே.சிவநேசன் உரையாற்றுவதையும் கதிரன் தர்மலிங்கம், இராசு தவமணி ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க இணைப்பாளருமான கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவருமான இன்பம் பயனாளிக்கு மரக்கன்று வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## இராசி பலன்

**மீனம்** — பகை விலகி பாசம் கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்களை காணலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

**மேடம்** — யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்** — உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** — நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்** — பெற்றோர் மீது பிரியம் கூடும், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம் | | ராகு |
| செவ், கேது. | | | |
| சனி | குரு.புத | சூரி, சுக் | |

27.10.2018

ஐப்பசி 10, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

திருதியை முன்னிரவு 08.18 மணிவரை

கார்த்திகை முற்பகல் 10.24 மணிவரை

சுபநேரம் 3.03-4.33 மணிவரை

இராகுகாலம் 9.03-10.33 மணிவரை

வளவன்

**கடகம்** — பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.

**மகரம்** — செல்வாக்கு மேலோங்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்** — மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** — கடன் சுமை குறைய வழி வகை செய்வீர்கள், இலத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்கள் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** — இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**துலாம்** — கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், ரோக பயமுண்டு, வீண் விரயங்கள் ஏற்படலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதம் ஆகலாம்.

**கன்னி** — மறைமுக எதிர்ப்புகள் மாறும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களில் சந்திப்புகள் இடம்பெறலாம்.

# 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

# சின்னத்துரை அருணகிரிநாதன்


(உரிமையாளர், பிரதீபா மரக்காலை, சுன்னாகம்)

தோற்றம்: 20.04.1949
மறைவு: 06.11.2017



அன்புத் தெய்வமே– எங்கள் அப்பா
ஆண்டொன்று கழிந்தாலும்
ஆறவில்லை எம் மனது
ஏக்கத்துடன் காக்கவிட்டு
ஏன் அப்பா சென்றீர்கள்?
பண்பான வழிகாட்டி
பாசத்துடன் வளர்த்துவிட்டு
பாரைவிட்டுச் சென்றீர்கள்
பாவிகள் நாம் தவிக்கின்றோம்
குறையேதும் இல்லாத நிறைகுடமே
நீங்கள் அப்பா– இறைவன்
குறைவைக்க எண்ணியதால்
ஆயுளைத் தான் குறைத்தானோ
காலம் தானிருக்க–எம்மைக்
கண்ணீரில் ஆழ்த்திவிட்டு
விண்ணோடு சென்றீர்கள்
வேதனையில் வாடுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(6166)

# பளை காற்றாலை விடயத்தில் எந்தவிதமான மோசடிகள், முறைகேடுகள் இடம்பெறவில்லை

## முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் விளக்கம்

பளை காற்றாலை விடயத்தில் எவ்வித மோசடிகளும் முறைகேடுகளும் இடம் பெறவில்லை என தெரிவித்த முன்னாள வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன், நாங்கள் நல்லது செய்வதைப் பொறுக்காத சிலர் வேண்டுமென்றே திட்டமிட்டு தவறான கருத்துக்களை பரப்பியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். வாராந்த கேள்வி பதிலிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

குறித்த கேள்வியில் தங்களுடைய காலத்தில் பளையில் அமைக்கப்பட்ட காற்றாலை மூலமான மின்சார பிறப்பாக்கி பொறிகளை நிறுவுவதற்கான அனுமதி வழங்கப்பட்ட போது உரிய நடைமுறைகள் பின்பற்றபடவில்லை என்றும் வடக்கு மாகாணசபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டதாகவும் மாகாண சபையில் கூறப்பட்டது. அது தொடர்பாக நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?

அதற்கான பதில் வடக்கு மாகாணத்திற்கு வருடாந்தம் 20 மில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுத் தருகின்ற இந்த நல்ல திட்டத்தில் நான் அறிந்த வரையில் எவ்வித மோசடிகளும் முறைகேடுகளும் இடம்பெறவில்லை. நாங்கள் நல்லது செய்வதைப் பொறுக்காத சிலர் வேண்டுமென்றே திட்டமிட்டுக் கணக்காய்வு அலுவலர்களுக்குத் தவறான தகவல்களை வழங்கியதன் காரணமாக அவர்களால் பல்வேறுபட்ட கேள்விகளும் தவறான கருத்துக்களும் முன் வைக்கப்பட்டன. இந்தக் காற்றாலை தொடர்பாக என்னால் வடக்கு மாகாண பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய ஆவணங்களுடன் அண்மையில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காற்று மின்னாலை நிறுவனங்களுடன் வடக்கு மாகாண சபையின் சார்பில் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் பிரதம செயலாளருக்கு பதிலாக வடக்கு மாகாணசபையின் பேரவை செயலாளரினால் கையொப்பமிடப்பட்டிருந்தது. தொடர்பு பட்ட சட்டத்தில் பேரவை செயலாளர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. பேரவை செயலாளரினால் ஒப்பமிட்டது தவறான தென்றும், பிரதம செயலாளரே அதில் ஒப்பமிட வேண்டுமென் றும் ஆளுநரால் தெரிவிக் கப்பட்டதால் அந்த ஒப்பந்தம் மீளப்பெறப்பட்டு செல்லு படியற்றதாக்கப் பட்டுப் புதிய ஒப்பந்தம் 07.11.2014 இல்செய்துகொள்ளப்பட்டது. அதன் வழங்கு காலம் பின்னோக்கிய நாளில் இருந்தே நடை முறைக்கு வந்தது. வடக்கு மாகாணத்தின் பிரதம செய லாளரினால் ஒப்பமிடப்பட்ட இந்த ஒப்பந்தமே நடைமுறையிலுள்ள ஒப்பந்தமாகும்.

குறித்த நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமானது வாடகை ஒப்பந்தமோ அல்லது குத்தகை ஒப்பந்தமோ அல்ல. அதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லை. குறித்த நிறுவனம் ஈட்டும் வருமானத்திற்கும் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்திற்கும் சட்ட தொடர்பாடல்கள் எதுவுமில்லை. செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமானது இந் நிறுவனங்களிடமிருந்து அவர்களின் சுய விருப்பின் அடிப்படையில் வணிக நிறுவனங்களுக்கான சமூக கடப்பாடாக நன்கொடையை பெறுவதற்கான ஒரு ஒப்பந்தமாகும். **(CSR- Corporate Social Responsibility).** இந்த விடயத்தில் அந்த நிறுவனத் திடம் இருந்து பெறப்படும் நன்கொடையானது அவர்களுக்கு கிடைக்கும் வருமானத்தின் அடிப்படையில் பேரம் பேசி கட்டாயப்படுத்தி வசூலிக்க முடியாதென்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டி யதாகும். வன்முறைக்கும் வன்சிந்தனைக்குமே பழக் கப்பட்ட சிலரே ஏன் கட்டா யப்படுத்தி கூடிய தொகை பெறவில்லை என்று கேட் கின்றார்கள்?

மேலும் 2014 முதல் 2016 ஆம் ஆண்டுகளுக்கிடையில் 25 மில்லியன் ரூபா மட்டுமே பெறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டமை தவறானதாகும். ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிற்கும் 20 மில்லியன் ரூபா பொருட்களாகவோ, பணமாகவோ வழங்கப்படலாம். அந்த வகையில் குறித்த ஆண்டுகளுக்கான வருமானம் 20 மில்லியன் ரூபா வீதம் வடக்கு மாகாண சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

காணிக் குத்தகையானது காணி ஆணையாளருடன் தொடர்புடைய விடயமாகும். அரசாங்க சட்ட திட்டங்களுக்கு அமைவாக குறித்த காணிக்குரிய குத்தகையானது மாகாண காணி ஆணையாளரினால் வருடாந்தம் அறவிடப்படுகின்றது. குறித்த அரச காணியினை இந் நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதற்கு பளை பிரதேச செயலாளரினால் 12.08. 2013 இல் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாகாணக் காணி அமைச்சர் என்ற வகையில் 19.03. 2014இல் என்னால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விடயத்தில் வடக்கு மாகாண அமைச்சர் சபையிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை என்பதும் தவறானதாகும். 30. 09.2014இல் அமைச்சர் சபையின் அனுமதி பெறப்பட்டு பிரதம செயலாளரினால் குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டது.

இந்த நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தொகையானது மாகாண சபையின் வரவு-செலவு திட்டத்தில் 2014ஆம் ஆண்டில் இருந்து உள்ளடக்கப்படவில்லையென்பது தவறான கருத்தாகும்.

2014ஆம் ஆண்டில் நீர்த் தாங்கிகள் பொருத்தப்பட்ட 6 பாரவூர்திகள் காற்றாலை நிறுவனங்களினால் வழங்கப்பட்டமையால் வரவு- செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. அதன் பின்னர் எல்லா ஆண்டுகளிலும் வருடாந்த வரவு -செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த நன்கொடையில் இருந்து அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டே வழங்கப்பட்டுள்ளது. அடுத்து இந்த திட்டத்தினை செயற் படுத்துவதனால் ஏற்படும் சூழல் பாதிப்பு சம்பந்தமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இந்த விளக்கங்களுக்கு மாறாக 10.09.2018 திகதி இடம்பெற்ற மாகாண பொது கணக்கு குழு அமர்வின் அவதானிப்புக்கள் தொடர்பாக அமைச்சர் சீ.வீ.கே. சிவஞானம் தவறான விடயங்களை உள்ளடக்கி தவறாக வழிநடத்தக்கூடிய விதத்தில் பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளமையும் அவதானிக் கப்பட்டுள்ளது. இதையடுத்தே வடக்கு மாகாண பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய விளக்கங்களை ஆவணங்களுடன் நான் அனுப்பி வைத்துள்ளேன். வடக்கு மாகாண சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக தவறான கருத்துகளை மக்கள் வைத்திருக்கக் கூடாதென்பதற்காகவே மேற்கூறப்பட்டவாறு ஊடகங்கள் வாயிலாகவும் இவற்றைத் தெளிவு படுத்தியுள்ளேன் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# தொற்றா நோய்கள் தொடர்பாக படக்காட்சியும் பரிசோதனையும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வயன்ஸ் கழக அனுசரணையுடன் இலங்கை நீரிழிவுக் கழகத்தினால் நீரிழிவு மற்றும் தொற்றா நோய் சம்பந்தமான கருத்துரைகள் படக்காட்சி, பரிசோதனைகள், ஆலோசனைகள் இலவசமாக இன்று 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் கல்யாண மண்டபத்திலும் பிற்பகல் 2 மணி முதல் கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்திலும் நடைபெறும். (இ)



யமஹா மோட்டார் நிறுவனத்தின் காட்சியறை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்த திறப்பு விழா நிகழ்வில் நிறுவனத்தின் முகாமையாளர்களான சஹரன் ஷியாவுடீன், சனத் கமகே, பிராந்திய முகாமையாளரான கனேஸ் குலேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு திறந்து வைத்தனர். (2-9)

# சமிக்ஞை விளக்குகளின்றி நிறுத்தப்படும் வாகனங்களினால் பயணிகள் அசௌகரியம்

(கரணவாய்)

வடமராட்சி வல்லைப்பகுதியில் இரவு வேளைகளில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் சமிக்ஞை விளக்குகள் இன்றி நிறுத்தப்பட்டுள்ளதாக பயணிகளினால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவுவேளைகளில்வல்லை சந்தி தொடக்கம் புறாப் பொறுக்கி வரையான வீதியின் மருங்கில் நிறுத்தி வைப்பதற்கான சமிக்ஞை விளக்குகள் இன்றி வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான சாதகமான நிலை காணப்படுகிறது.

எனவே இரவு வேளைகளில் நிறுத்தி வைப்பதற்கான சமிக்ஞை விளக்குகள் இன்றி வீதி ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-60)

# தேசோதயத்தின் தேசிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசோதய அமைப்பின் தேசிய மாநாடு எதிர்வரும் மாதம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற வுள்ளதால் இது தொடர்பான கலந்துரையாடல் நாளை 28ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு தேசோதய தலைவர் தலைமையில் யாழ். மாவட்ட சர்வோதய காரியாலயத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் முக்கியமான முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து தேசோதய உறுப்பினர்களையும் பங்குகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-7)

## அமைச்சரவையில் 'றோ' உளவாளிகள்

# அரசியலை தந்தையிடம் கற்றுக்கொள்ளுங்கள் நாமலுக்கு அமைச்சர் அமரவீர அறிவுரை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரசியல் ரீதியில் கற்றுக் கொள்ள வேண்டிய பல விடயங்கள் காணப்படுகின்றன என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.



விவசாயத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"றோ" அமைப்பு தொடர்பில் தகவல் வழங்கியதாக குறிப்பிடப்படும் அமைச்சரவையிலுள்ள நால்வரும் இந்தியப் புலனாய்வுப் பிரிவில் மாத சம்பளம் பெறுபவர்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமை கூட்டு எதிரணி என்ற பிரிவின் இயல்பாக காணப்பட்டாலும் சிறந்த அரசியல் கொள்கைகளுக்கு முரணானது.

எனது நாட்டின் உள்ளக விவகாரங்களில் எதிர்த்தரப்பினர் தங்களின் கொள்கைகளுக்கு இணங்க செயற்படலாம். ஆனால் சர்வதேச விவகாரங்களின் போது சில நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

அமைச்சரவையில் "றோ" புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புடைய அமைச்சர்கள் இருக்கின்றார்களா? என்பது தொடர்பில் குறிப்பிடுவது கடினமானது. அவ்வாறான தொடர்புகள் ஏதும் இல்லை என்றே நான் கருதுகின்றேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமை அவரது சிறந்த அரசியல் தூர நோக்கு கொள்கையினை வெளிப்படுத்துகின்றது.

இவரிடம் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரசியல் ரீதியில் கற்றுக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நூல்வெளியீடு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வி.குகநாதன், எஸ்.வி.பாலமுரளி ஆசிரியர்களின் **Mathematics Grade-6** ஆங்கில மொழி மூல புதிய பாடத்திட்டம் நூல் வெளியீடு நாளை மறுதினம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி யளவில் கொக்குவில் பொது நூலக மண்டபத்தில், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் நா.தியாகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேசசபை செயலாளர் எஸ்.சுதர்ஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நல்லூர் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா ஆசியுரையை வழங்கு வார்.(2)

# கற்பகதரு சங்க ஒன்றுகூடலும் வருடாந்த பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

தென்னைப்பயிர்ச்செய்கை சபையினருடன் இணைந்து வலிகாமம் பிரதேச கற்பகதரு சங்கங்களுடனான வருடாந்த ஒன்றுகூடலானது நாளை மறுதினம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 09.30 மணிக்கு வலி.தெற்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

அன்றைய தினம் தென்னை வளர்ப்பு, அடுத்த வருடத்திற்கான ஒதுக்கீடுகள், சங்க வளர்ச்சி ஆகியவை தொடர்பாகவும் செயற்றிட்டம் தயாரிக்கவுள்ளதனால் சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் மூவரையும் தவறாது பங்குபற்றுமாறும் சங்க மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகள் பற்றிய முழுமையான தகவல்களுடன் வருகைதருமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-7)

# இலங்கை -பாகிஸ்தான் உறவு காந்தாரா காலத்திற்கு முற்பட்டது

## பாகிஸ்தானுக்கான உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இஸ்லாமிய குடியரசான பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட சட்டத்தரணி மொஹமட் ஷாஹீத் கடந்த 22ஆம் திகதி இஸ்லாமாபாத்திலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில்தனது கடமைகளை பொறுப்பேற்றார். தனது கடமைகளை பொறுப்பேற்ற மொஹமட் ஷாஹீத், தெரிவிக்கையில்,



"1948ஆம் ஆண்டிலிருந்து பாகிஸ்தானிற்கும் இலங்கைக்குமான உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவுகள் ஆரம்பித்திருந்த போதிலும் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளின் தோற்றம் காந்தாரா காலத்திற்கு முற்பட்டது." என தெரிவித்தார்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை தெற்காசியாவின் மூலோபாய பங்காளிகளாக இருப்பதாகவும் இரு நாடுகளுக்கிடையிலான உறவு சகோதரத்துவம் மற்றும் பரஸ்பர நம்பிக்கை என்பனவற்றை அடிப்படையாக கொண்டது எனவும் மேலும் தெரிவித்தார்.

மொஹமட் ஷாஹீத் இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி தேசிய சபை தலைவர், வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையத்தின் தலைவர், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான இலங்கை பணிப்பாளர், மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் ஆலோசகர் மற்றும் தேசிய தொழில் மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் மற்றும் இயக்குநர் போன்ற உயர் பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# மன்னார் புதைகுழி அகழ்வுப்பணி 197 எலும்புக்கூடுகள் அடையாளம்

(மன்னார்)

மன்னார் ச.தொ.ச. விற்பனை நிலையப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித புதைகுழி அகழ்வுப் பணியில் இதுவரை 197 எலும்புக்கூடுகள் அடையாளமிடப்பட்டுள்ளதுடன்மழை பெய்கின்றபோதும் குறித்த பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கடந்த மார்ச் மாதம் மன்னார் நகர் நுழைவாயில் பகுதியில் ச.தொ.ச விற்பனை நிலையம் ஒன்று அமைக்கும் நோக்குடன் அதற்கான கட்டுமானப்பணி வேலைகள் நடைபெற்ற வேளையில் அங்கு அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து இக் கட்டுமானப்பணிகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை வரை 95 ஆவது நாட்களாக மனித எச்சங்கள் நோக்கிய அகழ்வுப் பணி நடைபெற்று வருகின்றது.

இதுவரைக்கும் 197 எலும்புக்கூடுகள் அடையாளமிடப்பட்டதில் 191 எலும்புக்கூடுகள் குழிக்குள் இருந்து வெளியேற்றப்பட்டு இவை கள் பாதுகாப்பான முறையில் தொடர்ந்து மன்னார் நீதிமன்றில் வைக்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்ட நீதவான் ரி.சரவணராஜாவின் மேற்பார்வையில் சட்டவைத்திய நிபுணர் டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷவை தலைமையாகக் கொண்ட குழுவினர் இவ் அகழ்வு பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(2)

# வீசிய கடும் காற்றினால் மரம் முறிந்து வீடு சேதம்



(கண்டாவளை)

கிளிநொச்சி ஜெயந்தி நகர் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் வீசிய கடும் காற்றினால் வீட்டின் மீது மரம் முறிந்து விழுந்துள்ளது.

அத்துடன் வீடும் சேதமடைந்துள்ளது. இதன் போது வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். (2-315)

# வவுனியா வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(வவுனியா)

வவுனியா வர்த்தகர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிமுதல் பிற்பகல் 5 மணி வரை ஓவியா விருந்தினர் விடுதியில் வவுனியா வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையில்வர்த்தகர்களின் நன்மை கருதி தமிழ்மொழியில் நடத்துவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதற்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"வரி பொறுப்பல்ல சமூகத்தின் கடமை" எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கில்வரி செலுத்துபவர்கள் வரி செலுத்தாதவர்கள் அனைவருக்குமாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கத்தின் உள்நாட்டு இறைவரி சட்டத்தின் கீழான கொள்கைகள் தொடர்பான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. இதில் கலந்து கொண்டு உங்களது சந்தேகங்கள் தொடர்பாக அதிகாரிகளிடம் வினாக்களைக் கேட்டுக்கொள்ள முடியும்.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையில் உள்நாட்டு இறைவரித்திணைக்களம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு இதனை முதல் முறையாக தமிழ்மொழியில் ஏற்பாடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.(2)

# 301.77 மில்லியன் ரூபா நிதியில் ஆயிரத்து 936 செயற்றிட்டங்கள்

## இதுவரை 297 மில்லியன் ரூபா செலவு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக ஆயிரத்து 936 செயற்றிட்டங்களுக்காக 301.77 மில்லியன்ரூபா நிதி கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்டச் செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்திகளுக்காக நிதிகள் கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக இவ்வாண்டு 301.77 மில்லியன் ரூபா நிதிகிடைக்கப்பெற்று அதன் ஊடாக ஆயிரத்து 936 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதுவரை இத்திட்டங்களின் ஊடாக 297.18 மில்லியன் ரூபா நிதி செலவிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரமானிய விநியோகத்தில் முறைகேடு

(கண்டாவளை)

கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தின் ஊடாக நாகேந்திரபுரம் பிரதேச விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரமானியத்தில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாகேந்திரபுரம் கமக்கார அமைப்பின் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியலில் தலைவரின் கையொப்பத்துடன் மட்டுமே உர விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இதில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகவும் விவசாயிகளும் அமைப்பின் ஏனைய பிரதிநிதிகளும் சுட்டிக்காட்டியுள்ளர்.

அதாவது, உரமானியம் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட கமக்கார அமைப்பின் தலைவர்,செயலாளர் உள்ளிட்டோரின் கையொப்பம் பெறப்பட்டு அவற்றின் மூலம் உரமானியங்கள் வழங்கவேண்டியுள்ளபோதும் குறித்த பிரதேச கமக்கார அமைப்பின் செயலாளர் கடந்த இரண்டு மாதங்களுக்கு தன்னுடைய பதவியை இராஜினாமா செய்து பெரும்பாக உத்தியோகத்திடம் கடிதத்தினை கையளித்திருந்தபோதும், உப செயலாளரிடம் குறித்த பதவி ஒப்படைக்கப்படவில்லை. இந்நிலையில் தலைவரின் கையொப்பத்துடனேயே உரமானியம் வழங்கப்பட்டிருப்பதாகவும் இதில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்திரிடம் வினவியபோது, மேற்படி கமக்கார அமைப்பினால் வழங்கப்பட்ட பட்டியல் மற்றும் பசளைப்படிவங்களில் தலைவர் மட்டுமே கையொப்பம் இட்டிருந்தார்.

இது தொடர்பான முறைப்பாடு கிடைக்கப்பெற்றதையடுத்து, குறித்த பிரதேசத்திற்கான உரமானியத்தை தற்காலிகமாக நிறுத்தியிருப்பதாகவும் இதில் முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (2-315)

# நீர் தேங்கி நிற்கும் பள்ளத்தை மூடுமாறு மக்கள் கோரிக்கை



(பரந்தன்)

கிளிநொச்சி நகரின் கரைச்சி பிரதேச சபைக்கு முன்பாகவுள்ள பள்ளத்தை மூடுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பள்ளத்தில் தேங்கி நிற்கின்ற மழை நீர் மாதக் கணக்கில் தேங்கி நிற்பதோடு, கழிவுகளும் சேர்ந்து துர்நாற்றம் வீசுவதாகவும், அவ்வழியூடாக பயணிக்கமுடியாதுள்ளதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி அதிகளவு பொது மக்கள், மாணவர்கள் பயன்படுத்துகின்ற வீதியாகவும், அப் பகுதியில் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், பிரதேச சபை, உணவகங்கள் என்பன காணப்படுகின்றன.

எனவே குறித்த பள்ளத்தினால் அங்கு தேங்கி நிற்கின்ற நீர் அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்களும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன எனவும் பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-312)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு



(கிளிநொச்சி)

கிளி/பூநகரி சிறி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்விற்கு தேசிய சகவாழ்வு அமைச்சர் மனோகணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். குறித்த புாடசாலையில் 163 புள்ளிகளை பெற்ற இரு மாணவிகள் மற்றும், புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய ஏனைய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர்,

பாடசாலை பௌதீக வள பற்றாக்குறைகள் பற்றி நான் அறிந்தேன். பாடசாலையின் சுற்று மதில் மற்றும் ஏனைய கட்டட வசதிகளிற்கு எனது அமைச்சினால் உதவுவேன்.

இதேவேளை இந்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் சிறந்த அமைச்சர்களாகவோ, நல்ல தலைமைத்துவம் கொண்டவர்களாகவோ, விளையாட்டில் தேசியம், சர்வதேசம் பாராட்டக்கூடிய நிலையில் முன்னேற வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.(2)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—166

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நீண்ட காலக்கனவொன்று நனவாகுவது கண்டு உள்ளம் பூரித்துப்போனது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் தமிழ் நாடு வேளாண் பல்கல்லைக்கழகத்திற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுதப்பட்ட பின்னர் எதிர்வரும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் இரு பல்கலைக்கழகங்களினதும் கூட்டுறவு பல,விடயங்களைப் பற்றி அலச இருக்கின்றதனை பலமான எதிர்பார்ப்பாக விவசாய பெருமக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலிருந்து பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சார்பில் பேராசிரியர் B.J.பாண்டியன், விவசாய பீடாதிபதி பேராசிரியர் S.மகிமைராஜா, விவசாய பொருளியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவன பேராசரியர் வரதராஜன், பூங்கனியியல்பீட பீடாதிபதி பேராசிரியர் எம். ஜவகர்லால், உயர்பட்ட படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிவகுமார் ஆகியோர் வருகை தரவிருக்கின்றார்கள். நடைபெறவிருக்கின்ற கருத்தரங்கை சிறப்புற நடத்துவதற்கு இந்திய துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் இணங்கியிருக்கின்றார். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த சந்திப்பில் இதில் வடமாகாண விவசாய அமைச்சின் விரிவாக்கப் பணிப்பாளர் சிவக்குமார் மற்றும் அதிகாரிகள் பிராந்திய விவசாய ஆராய்சி நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி எஸ். ஜே.அரசகேசரி மற்றும் அலுவலர்கள், பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவா பா.லோகநாதன், விவசாய பீட பீடாதிபதி கலாநிதி சூரியகுமார், பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பட்டதாரிகள் விவசாய பெருமக்கள் எனப் பலரும் கலந்து கொள்ள இருக்கின்றார்கள். இந்தியாவில் தமிழ் நாட்டில் அமைந்துள்ள ஒரேயொரு விவசாயப் பல்கலைக்கழகத்துடனான கூட்டுறவு விவசாயத்தை எமது பிராந்தியத்தில் வலுப்பெற உதவும் என நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் இந்த கூட்டு முயற்சியின் முழுமையாக பயன் பெறும் பீடமாக அமையவிருப்பது அனைவருக்கும் மகிழ்வினைத் தந்திருக்கின்றது. இந்தியாவில் விவசாயக் கற்கையில் தன்னிகரில்லாத பல்கலைக்கழகமாக திகழும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்துடனான இணைப்பு இங்குள்ளவர்களை விவசாயக் கல்வியில் ஊன்றிக் கால்பதிக்க வைக்கும் என நம்பலாம்.

வடமாகாணத்தின் வளங்கள் முழுமையாக கவனத்தில் எடுக்கப்பட்டு விவசாய செய்கையை முன்னகர்த்துவதற்கான வழிவகைகள் முறையாக இனங்காணப்பட்டு இரு பல்கலைக்கழகங்களும் இணைந்த இந்த துறையில் வட மாகாணம் சிறக்க வழிவகை செய்ய வேண்டும். தொழிற்றுறை சார்ந்து பார்த்தால் விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடி இவற்றுடன் சுற்றுலாத்துறை என்பனவற்றின் அபிவிருத்தியை மையப்படுத்தி பார்க்கலாம். இவ்வளங்கள் சார்ந்த தொழிற்றுறைக்கு முக்கியத்துவம் கொடுத்து மேன்மையுற வைக்க வேண்டியது விவசாய பீடத்துடன் இணைந்த அனைவரினதும் பொறுப்பாகும். அரச வேலை வாய்ப்பு என்பது இனி வருங்காலத்தில் அதிகளவில் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் அரிதாகவே இருக்கும். மேலதிகமாக தனியார் நிறுவன வேலைவாய்ப்புக்களை நம்பியே இனி தொழிற்றுறை நகர இடமுண்டு. இந்நிலையில் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி தேவையான தொழிற்றுறைகளை விருத்தி செய்ய வேண்டியிருக்கின்றது. க.பொ.த.சாதாரண தரம் பயின்ற மாணவர்கள், க.பொ.த. உயர்தரம் கற்ற மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளாக வெளியேறியவர்கள் எனப் பலருடைய வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் செயற்றிட்டத்தை நாம் வரையறை செய்ய வேண்டியுள்ளது. தனியார் தொழிற்றுறைகளுக்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தினாலன்றி இனிவருங்காலத்தில் வேலைவாய்ப்பு என்பது கேள்விக்குறியே. இதனை மையப்படுத்தி விவசாயபீடத்தின் கற்றலை தொழில் வாய்ப்புக்கான வினைத்திறனானதாக மாற்றியும் புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்தவும் வேண்டியிருக்கின்றது. தொழிற்றுறைக்களுக்கான பயிற்சிகள் தொடர்ச்சியாக கொடுக்கப்பட்டாலன்றி அவர்களை தொழிற்றுறைக்குள் முழுமையான வினைத்திறனான தொழிலாளர்களாக உள்வாங்க முடியாது. இந்த நிலையில் மாற்றத்தை எதிர்பார்த்திருக்கும் அனைவருக்குமான வழிவகைகள் உருவாக்கப்பட வேண்டும்.

விவசாய பீடத்துடன் பொறியியல் பீடமும் தொழில்நுட்ப பீடமும் ஒன்றாக இணைந்திருப்பதுடன் அறிவியல் நகரில் ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனமும் அமையப்பெற்றிருக்கின்றது. இந்நான்கு நிறுவனங்களும் ஒன்றிணைந்தால் கிளிநொச்சி அறிவியல் நகரில் தொழிற்பேட்டையை நிறுவுவதற்கு முடியும். இதனை தொழில்நுட்ப மையம் என அழைக்கலாம். இலங்கையிலேயே முதன்முதலாக இவ்வாறு பீடங்கள் ஒன்றிணைந்திருப்பது வரப்பிரசாதமாகவே கருதலாம். இவை வருங்காலத்தில் தொழில்நுட்ப பட்டதாரிகளை தரமானதாக உருவாக்க வழி செய்யும் என நம்பலாம். இலங்கையிலேயே வடமாகாணத்திலேயே இவ்வாறான ஒரு இணைப்பு சாத்தியமாயிருக்கின்றது எமக்கான வரப்பிரசாதமாகும்.

விவசாய பீடத்தின் செயற்பாடுகளை இனிவருங்காலத்தில் விரிவாக்குவதற்கான வழிவகைகளை நாம் விரைந்து கண்டாக வேண்டும். மக்களுக்கான சேவைசெய்யும் காலத்தில் நாம் பயணித்திருக்கையில் விவசாய பெருமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் எம்மாலான தீர்வினை கண்டாக வேண்டும். ஆராய்ச்சியின் மூலமாகவும் கற்றலை மேம்படுத்தியும் எதிர்கால எதிர்பார்ப்பினை நாம் ஈடுகட்ட முடியும். வியக்கத்தகு செயற்பாடுகளில் மாணவர்களையும் ஈடுபடுத்த அவர்களின் மென்திறனை விருத்தி செய்ய முடியும். அனுபவக் கற்றல் இங்கே முழுமையாக உள்வாங்கப்பட வேண்டும். மாணவர்கள் பலதரப்பட்ட அனுபவங்களை உள்வாங்கும் போது அவர்களால் சிறப்பாக தொழிலை செய்யமுடியும்.

விவசாய பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடங்களுடனும் இணைந்து இணைந்த கற்கையினை ஆரம்பிப்பதற்கு வழியுண்டு. இருபீடங்களுடனும் முகாமைத்துவ பீடம் மற்றும் விஞ்ஞான பீடம் என்பன இணைந்த கற்கை நெறியையும் இதற்காக முயற்சிக்கலாம். எதிர்காலத்திற்கு தேவையான கற்கை நெறிகளை மையப்படுத்தியதாக எமது கற்கைகளை மீளப்புதுப்பிக்க வேண்டியதை இதில் வலியுறுத்தி தொடர்ந்து செய்ய வேண்டியவற்றை மக்களிடமும் பட்டதாரிகளிடமும் பெற்று மாற்றியமைக்கலாம். பழைய மாணவர்களின் கருத்துக்களுக்கு இங்கே முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். விவ்சாயபீடத்தின் பட்டதாரிகள் விவசாய பீடத்தின் சொத்துக்களாகும்.

இப்பீடத்தின் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. இதனை நாம் முழுமையாக உள்வாங்க வேண்டும். வாருங்கள் உங்கள் கருத்துக்களை வெளிப்படையாகவே முன்வையுங்கள். நாம் எதிர்பார்த்திருக்கும் பீடத்தை அனைவரும் சேர்ந்து இயக்கலாம். மக்களின் எதிர்பார்ப்புக்களை உள்வாங்கி முன்னுயர வேண்டும். இது பீடத்தின் வாழ்க்கையோடு ஒன்றிய இந்த ஜீவனின் வேண்டுகோள்!

வடமாகாணத்தைப் பொறுத்த வரை யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்து பார்த்தால் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் அதிகமான மக்கள் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றார்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்தில் வதியும் மக்கள் இறுதிக்கட்டப் போரின் போது அதிகமாக பாதிக்கப்பட்டவர்களாவர். அவர்களது வாழ்வாதாரத்தை விரைந்து முன்னேற்றுவது அவசியமாகும். தேவையானளவு உணவு கிடைப்பதில்லை என்பதற்கு மேலாக அந்த உணவு நிறையுணவாக இருக்க வேண்டும் என்னும் கூற்றும் வலிந்துரைக்கப்படுகின்றது. சத்துணவுக்குறைவு என்பது எமது மக்களை பலவீனப்படுத்தும் இன்னும் பலமற்றவர்களாக ஆக்கிவிடுவதுடன் அதிகரித்து வரும் நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியற்றவர்களாக ஆக்கிவிடுகின்றது. இந்த விடயத்தில் நாம் அனைத்து துறையையும் முடுக்கிவிட்டு மக்களது சத்துணவுக்கான வழிவகைகளை அவசியம் இனங்கண்டு நிறைவுசெய்ய வேண்டும். எமது உணவு எங்களூர் உணவு. அதுவும் சத்துணவு. அதற்கு மேலும் சுகாதாரமான உணவு அனைவருக்கும் கிடைக்க செய்ய வேண்டும். இதை யார் செய்வது என்பதே தற்போதைய வினாவாகும். ஒருவர் இன்னொருவர் மீது குறைகாண்பது என்றுமே நிறைவைத் தராது. அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

கிராமத்து எழுச்சி இங்கே திருப்பத்துக்கான முதலாக முன்வைக்கப்படுகின்றது. மறைந்த பாரததேசத்தின் ஜனாதிபதி அப்துல் கலாமின் தீர்க்க தரிசனமான வார்த்தைகள் இவை. கிராமங்களின் வளர்ச்சியை முன்னகர்த்துவதற்கான கட்டமைப்புக்கள் இன்னும் உயிர்ப்பு பெற வழிவகைகளைச் செய்தல் நன்று. கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான வேலைத்திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கிராமங்களை எழுச்சிபெறும் தொழில்நுட்ப கிராமங்களாக இன்னும் தொழிற்றுறைக்கான இடங்களாக ஆக்குதல் இதற்கான சிறந்த வழிமுறையாகும். தொழில்நுட்ப வளங்களை கிராமம் தோறும் உள்வாங்கி அவற்றை முழுமையாகப் பயன்படுத்தி உற்பத்தி பெருக்கத்திற்கு கிராமங்களின் முழுமையான பங்களிப்பைப்பெற்றுக் கொள்ள முடியும். கிராமங்களின் முன்னேற்றத்தினால் தான் நாட்டின் சுபீட்சம் கிடைக்க முடியும். கிராமத்து வளங்களை இனங்கண்டு அங்குள்ள படித்த இளைஞர்கள்,யுவதிகள் மற்றும் வயதானவர்களின் உதவியுடன் திட்டமிடலாளர்களின் ஆலோசனையுடன் தொழில்நுட்ப வல்லுநர்களின் வலுவூட்டலுடன் கிராமத்தின் தொழில்நுட்ப வளர்ச்சியை தொழிற்றுறையுடன் இணைத்து இனங்கண்டு திட்டமிடப்படல் வேண்டும். தொழில்நுட்பதேர்களை கிராமத்து வீதிகளில் வடமிழுத்து கிராமத்தின் மணம், குணம் மற்றும் நிறம் மாறாமல் வலுவுள்ள அலகுகளாக மாற்றம் செய்ய வேண்டும். மாற்றமொன்றை எதிர்பார்த்த மக்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த மாற்றம் கிடைக்க வேண்டும். இது முடியும்.அதற்காக நாம் கடுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

வடபுலத்து வளங்களின் விபரங்கள் முழுமையாக திரட்டப்படல் வேண்டும். இதற்காக அந்தந்த துறைசார் திணைக்களங்களின் உதவியுடன் முழுவிபரங்களையும் இலத்திரனியல் வரைபடமாக மாற்றி அதில் ஆய்வுகளை நடத்தி வடபுலத்து வளங்களின், உயிரினங்களின், உயிர் பல்வகைத்தன்மையை தரவுகளாக பெற வழிசெய்தல் வேண்டும். பல்கலைக்கழக ஆய்வுகளில் இதற்கான முன்னுரிமைப்படுத்தலை ஏற்படுத்திக் கொள்ளலாம். அடிப்படை தரவுகளின்றி அதில் அபிவிருத்தியை ஏற்படுத்திவிட முடியாது. இதனுடன் கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தர உயர்விலும் கரிசனை செலுத்த வேண்டியது அவசியமாகும். கல்வி, விளையாட்டு, வேலைவாய்ப்பு, சுத்தமான, சுகாதாரமான மற்றும் ஊட்டச்சத்தான உணவு மற்றும் நீர் என்பவை கிடைக்க வழிசெய்தல் வேண்டும். கல்வி வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்க அனைத்து வழிவகைகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கல்வியில் பல்கலைக்கழக கல்விக்கான வசதி வாய்ப்புக்களை இன்னும் நாம் பெருக்கிக்கொள்ள வேண்டும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலுள்ள மனிதவள முகாமைத்துவ மையம், புறநிலைக்கற்கைகள் அலகு, வெளிவாரிப்பட்டப்படிப்பு என்பன வற்றை மேலும் விரிவாக்கி விருத்தி செய்து அதிக மாணவர்களை உள்வாங்கி கல்வியை அனைவருக்கும் வழங்க ஆவன செய்யவேண்டும். கல்வியில் பட்டப்பின்படிப்பிற்கான கற்கை நெறிகளை புதிதாக தேவை கருதி ஆரம்பிக்கவும் உயர்பட்டப் படிப்புக்கள் பீடமும் முனைகின்றது. மக்களின் கருத்தறிந்து, சமூகத்தின் தேவையறிந்து புதிதாக கற்கை நெறிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருக்கின்றது என்பதனை அறியத்தருகின்றோம். இன்னும் வவுனியா பிராந்திய நிலையத்தையும் மீளவும் இயங்கவைத்தது போல கிளிநொச்சியிலும் அறிவியல் நகரில் கிளிநொச்சி வளாகத்தை உருவாக்கவும் நாம் முயற்சிக்கின்றோம். அறிவியல் நகரிலுள்ள பீடங்களால் உயர்பட்ட கற்கை நெறிகள் வழங்கப்படுமிடத்து அங்கும் உயர்பட்ட பீடத்தின் நிலையத்தை ஸ்தாபிக்க முடியும்.

வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகள் கிராமங்களினூடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தற்போதுள்ள நடைமுறைகளின் குறைகளையறிந்து இந்த முயற்சியில் இன்னும் ஆர்வம் காட்டுவது பொருத்தமானதாக இருக்கும். விவசாய. கால்நடை மற்றும் மீன்பிடி ஆகிய வளங்களை முழுமையாகப் பயன்படுத்த நாம் தொழில்நுட்பத்தை உள்வாங்க வேண்டும். மனிதவளம் எமக்கு கிடைத்தற்கரிய சொத்து. அதனை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். உட்கட்டுமானம் தொழிற்றுறை விருத்திக்கு அவசியம் தேவையானதாகும். இதனை நாம் பேச்சுக்காக தேவையில்லையென்றாலும் எந்தவொரு நிலையிலும் இதனது அவசியத்தையும் தேவையையும் நாம் உணரவேண்டிவரும் என்பதை குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். போக்குவரத்து, சுகாதாரம், மின்சாரம், இன்னும் ஏனை துறைகளின் விருத்தி முக்கியமானது.

தனியார் தொழிற்றுறை விருத்தி நடந்தாலொழிய எமது இளைய சமூகத்திற்கான வேலைவாய்ப்பென்பது கேள்விக்குறியேதான். இதற்கு நாம் அரச இயந்திரத்தை முழுமையாக நம்பியிருக்காது தனியார் தொழிற்சாலைகளின் மற்றும் தொழிற்றுறைகளின் விருத்திக்கு அத்திபாரமிடவேண்டும்.

தனியார் முயற்சிகளுக்கு ஊக்கம் தரும் விடயங்களில் கரிசனை செலுத்துவது நல்லது. எங்களின் வளத்தை அழியவிடாது அதே நேரத்தில் அதனை வினைத்திறனாகப் பயன்படுத்தி சந்தையில் புதிய பொருட்களை உருவாக்க வேண்டும். இதற்குத் தான் கேள்வி அதிகமாக இருக்கும்.

சுதேச உணவுகளை உற்பத்தி செய்யும் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு முதன்மை கொடுக்கலாம். அதிலும் நீரிழிவு நோயாளர்கள், இருதய நோயாளர்களுக்கான தனித்துவமான சுகாதாரமான உணவுகளை உற்பத்தி செய்யலாம். சிறுவர்களுக்கான உணவு வகைகள், முதியவர்களுக்கான உணவு மற்றும் என்பவற்றிற்கும் முன்னுரிமையளிக்கலாம். புதிய உற்பத்திகளுக்கு களமமைத்து கொடுக்க வேண்டும்.

புதியன புகுதலும் என் பது இங்கே மிகவும் பொருத்தமானதாகும். எம் பணி செய்து கிடப்பதே.

கிளிநொச்சியில் அறிவியல் நகரிலமைந்துள்ள விவசாயபீடத்தின் நான்காவது உலகளாவிய உலர்வலய மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

இதிலும் பலரும் பங்குபற்றி மாநாடு சிறக்கவும் பல நல்ல திட்டங்களை இப்பீடங்களிலிருந்து உருவாக்கவும் நாமனைவரும் ஒன்றிணைவோம்.

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 180

# ரவியின் வீட்டை ட்ரோனில் படம் பிடித்த இருவர் கைது



முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் வீட்டை, ட்ரோன் கமரா மூலம் வீடியோப் பதிவு செய்ததாகக் கூறப்படும் இருவரை அந்த ட்ரோன் கமரா வுடன் கைது செய்ததாக, தலங்கம பொலிஸார் தெரி வித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர், வனவளத்துறைத் திணைக்கள அதிகாரியென்றும் மற்றையவர், ட்ரோன் கமரா இயக்குநர் என்றும், பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.


நாடாளுமன்ற வீதியில் அமைந்துள்ள தனது வீட்டை, ட்ரோன் கமரா மூலம் வீடியோப் பதிவு செய்வதாக, ரவி கருணாநாயக்க எம்.பி யினால், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டிருந்ததை அடுத்து அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய கூறினார். இந் நிலையிலேயே மேற்படி இருவரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், வனவளத்துறைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் மரக்கன்று நடும் வேலைத் திட்டத்துக்குத் தேவையான வீடியோப் பதி வொன்றே செய்யப்பட்டதாகவும் இதற்காக, ட்ரோன் கமரா மூலம் வீடியோப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

ட்ரோன் கமராவொன்றை வானில் செலுத்துவதாயின், சிவில் விமானச் சேவை அதிகாரியின் அனுமதி யைப் பெறவேண்டும் என்பதோடு அது தொடர்பில் உரிய பொலிஸ் நிலையத்துக்கும் அறிவித்திருக்க வேண்டும். இருப்பினும் இவ்வாறான நடைமுறையை உரிய திணைக்கள அதிகாரி பின்பற்றியிருக்கவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில், கைதான அதிகாரி உட்பட இருவரையும் அவர்களுடைய ட்ரோன் கமராவுடன் நேற்று கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(இ-7)

# மக்களின் வாழ்வாதாரத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை

## ஐ.தே.க.அமைச்சர் எரான் கூறுகிறார்



(கொழும்பு)

நல்லாட்சியில் மக்களின் வாழ்வாதாரத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவித்த, நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன, சாதாரண மக்களுக்கான சலுகைகளை கொடுக்க வேண்டும் என்றால் வரிகளை அதிகரித்தாக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிதி சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய வரி அறவீடுகள் குறித்தும் அடிப்படை பொருட்கள் மீதான வரிச் சலுகைகள் குறித்தும் நிதிச் சட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசு அழுத்தம் கொடுக்காவிட்டால் ஆதரவு வழங்குவதில் சந்தேகம்?

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன்



(நுவரெலியா)

பேச்சுவார்த்தை மூலமாக தீர்க்கப்பட வேண்டிய பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினை தீர்க்கப்படாததால் அரசாங்கம் இதில் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் முற்போக்கு கூட்டணி அரசாங்கத்திற்கு முன்வைக்கின்றது.

இதனடிப்படையில் நாட்டின் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் இந்த பிரச்சினையை உள்வாங்கி தீர்க்கப்படாவிட்டால் தேசிய பிரச்சினையான இப்பிரச்சினை சர்வதேச பிரச்சினையாக உருவாகுவதற்கான சந்தர்ப்பம் உருவாகி வருகின்றது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றோம் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேநேரத்தில் நாங்கள் அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும், ஆயிரம் ரூபாய் சம்பள பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வராத இடத்தில் இந்த முறை வரவு செலவுத்திட்டவாக்கெடுப்பில் எமது வாக்குகளை நாம் எந்த முறையில் பிரயோகிக்க வேண்டும் என்பதையும் தீர்மானிக்க வேண்டிய ஒரு நிலையில் இருக்கின்றோம்.

ஆகவே நாம் அரசுக்கு இன்று கொடுத்து வரும் ஆதரவு தொடருமா அல்லது மறுபரிசீலனை செய்ய முடியுமா என்ற பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள் ளோம்.

அரசாங்கம் இந்த தருணத்தில் தோட்ட தொழிலாளர்களின் கோரிக்கைக்கு ஒரு நல்ல பதிலை கொடுப்பதுடன் கம்பனிகளுக்கும் அழுத்தம் கொடுக்கவும் வேண்டும். போராடுகின்ற தொழிற்சங்கங்களுக்கும் உறுதுணையாக இருக்கவும் வேண்டும் அதேவேளை அரசாங்கம் தொழிலாளர்களின் பக்கத்தில் நினைக்க வேண்டும் என வலியுறுத்த விரும்புகின்றோம்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தீபாவளிக்கு முன் கிடைப்பது சந்தேகத்திற்குரிய விடயமாக இருந்தாலும், தீபாவளிக்கு முற்பணமாக பத்தாயிரம் ரூபாவை தொழிலாளர்களுக்கு வழங்க கம்பனிகள் சம்மதித்துள்ளன.

அதேவேளை தீபாவளிக்கு பின் சம்பள பிரச்சினை தீர்க்கப்படுமேயானால் அக்காலப்பகுதிக்கான நிலுவை ஊடான சம்பளத்தை வழங்க வேண்டும் என்பது எமது கொள்கையாக அமைந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆயிரம் ரூபாய் சம்பளத்தை பெற்று தருவதாக கடந்த காலத்தில் கூறியிருப்பது திட்டவட்டமாக எமக்கு தெரியாது. அவர் அவ்வாறு கூறியிருந்தால் அவரின் வாக்குறுதி பொய்யான வாக்குறுதியாக நாம் கருதுகின்றோம்.

ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்க முடியாது என இன்று கம்பனிகள் திட்டவட்டமாக தெரிவித்துள்ள நிலையில் 600 ரூபாவை மாத்திரம் தருவதாக கூறியிருக்கின்றார்கள். எனவே எமது மக்களின் கோரிக்கையாக ஆயிரம் ரூபா உள்ளதால் அதற்கு சரிசமமான நியாயமான சம்பள உயர்வை வழங்க முதலாளிமார் முன்வர வேண்டும்.

மக்கள் போராட்டங்கள் சில இடங்களில் சுயமாக இடம்பெற்றாலும், பல இடங்களில் அப்போராட்டங்களுக்கு அரசியல் சாயம் பூசப்பட்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இம்மக்களின் போராட்டங்கள் அரசியலுக்கு அப்பால் சென்று அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து பேசும் சக்தியை உருவாக்க வேண்டும். இதன் மூலம் இந்த தொழிலாளர்களுக்கு செய்யும் பெரிய உதவியாக இது இருக்கும் என நான் நம்புகின்றேன்.

ஆனால் இந்த விடயத்தில் தொழிற்சங்கங்களுக்கு இடையில் கௌரவ பிரச்சினை உள்ளது. இந்த கௌரவ பிரச்சினையை அகற்றி ஒரு மேசையில் அமர்ந்து கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுத்து சம்பள பிரச்சினையை முடிக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

'கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதியை சந்திக்க முற்பட்டுள்ளனர். ஆனால் ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்திக்க வேண்டும் என்றால் முன்கூட்டியே பதிவுகள் செய்திருக்க வேண்டும். இன்று நாட்டின் ஜனாதிபதிக்கு பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதனால் பாதுகாப்பும் அதிகரித்துள்ளது.

இது புரியாத நிலையில் புதிதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் குழப்ப நிலை தோன்றியுள்ளது எனத் தெரிவித்தார்.

இதன்போது வடமாகாண சபையின் ஆட்சிக் காலம் நிறைவுக்கு வந்ததன்பின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார். அவருக்கு இந்த தருணத்தில் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், தமிழ் தேசிய கூட்டமைப் பில் இணைந்து அம்மக்களுக்கு சேவை செய்த அவர் புதிதாக கட்சி அமைத்து மக்கள்சேவையை தொடர இருக்கின்றார்.

இவரின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை மக்களே தீர்மானிப்பார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யாழ்.பொது நூலக எரிப்புக்கு யார் காரணம்? வெல்கம குற்றச்சாட்டு; துமிந்த விசாரணை

யாழ். பொது நூலக எரிப்பு தொடர்பில் முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் கருத்து தெரிவித்திருந்த குமார வெல்கம நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகேயே யாழ்.நூலக எரிப்பிற்கு காரணம் என குற்றம் சாட்டியிருந்தார். இது தொடர்பாக பல குற்றச்சாட்டுகளை குமார் வெல்கம முன்வைத்திருந்தார்.

முன்னாள் அமைச்சர் குமார் வெல்கம முன் வைத்திருந்த பாரதூரமான குற்றச்சாட்டுகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என துமிந்த திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஒருவர் இன்னொரு நபரின் கரங்கள் குருதியில் நனைந்துள்ளன அவர் சில குற்றங்களிற்கு காரணம் என குற்றம் சாட்டினால் இந்த முக்கியமான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என துமிந்த திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகள் உண்மையானவையா என்பதை கண்டுபிடிப்பதற்கு உரிய அமைப்புகள் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் கோரியுள்ளார். முன்னாள் அமைச்சர் முன் வைத்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையென்றால் அதற்கு காரணமானவர்களிற்கு கடும் தண் டனை வழங்கவேண்டும் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

குமாரவெல்கம தெரிவிக்கும் ஒவ்வொரு விடயமும் முக்கியமானது. அவர் தனது மனதில் பட்டதை வெளிப்படையாக சொல்லக் கூடியவர், எனவும் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.(இ-7)




தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

ABI Fashion World

புதிய ரகங்கள்! நீங்கள் விரும்பும் விலையில் உங்கள்
அபி பஷன் வேல்ட் காட்சியறையின் 03 ஆவது தளத்தில்...

இது அபி பஷனின் நம்ம வீட்டுத் தீபாவளி!

அபி பஷன் வேல்ட் இன்

ரெடிமெற் ஆடைகளின் சங்கமம்

50% வரையான தீபாவளி சிறப்பு அதிரடி விலைக்கழிவு

இச்சலுகை இன்றிலிருந்து 05.11.2018 வரை
(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்குட்பட்டது)



112,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதான தபாலகத்திற்கும் இடையில்) abifashionworld 021 222 3738

# பெண்களை கோயிலுக்குள் அனுமதிக்க எதிர்ப்புத் தெரிவித்த 1407 பேர் கைது

(கேரளா)

சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குள் பெண்களை அனுமதிப்பதை எதிர்த்து கேரளா முழுவதும் போரட்டம் நடத்திய 1,407 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சபரிமலையில் அனைத்து வயதுப் பெண்களும் சென்று சாமி தரிசனம் மேற்கொள்ள கடந்த மாதம் 28 ஆம் திகதி இந்திய உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

ஆனால் இந்த தீர்ப்பு அளிக்கப்பட்டதிலிருந்து எதிர்ப்புத் தெரிவித்து கேரளாவில் நாள்தோறும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள்,



பேரணிகள் என்பன நடந்து வருகின்றன.

சபரிமலை ஐயப்பன் கோயில் நடை, மாதாந்த பூஜைக்காக கடந்த வாரம் திறக்கப்பட்டது.

ஆனால் பெண்களை அனுதிக்க கேரள அரசு தீவிரம் காட்டி போதுமான பொலிஸ் பாதுகாப்பை உறுதி செய்திருந்தாலும் போராட்டக்காரர்கள் சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் பெண்களை அனுமதிக்காமல் தொடர்ந்தும் போராட்டம் நடத்தினர். அவர்களின் கடும் எதிர்ப்பால், 10 இற்கும் மேற்பட்ட பெண்கள் திருப்பியனுப்பப்பட்டனர்.

இந்நிலையில் இப்போராட்டம் வன்முறையாக மாறியமையில் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக 440 வழக்குகளை பதிவு செய்திருந்ததுடன் மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் போராட்டம் நடத்தி, வன்முறையில் ஈடுபட்ட 1,407 பேர் கடந்த 2 நாட்களில் கைது செய்யப்பட்டனர். (7)

# ஸ்டெர்லைட் ஆலையை திறக்கக்கோரி பிரதமர் அலுவலகத்தில் மனுத்தாக்கல்

(தூத்துக்குடி)

தூத்துக்குடி ஸ்டெர் லைட் ஆலையை உடனடியாக திறக்கக்கோரி, பிரதமர் அலுவலகத்தில் ஸ்டெ ர்லைட் ஆதரவாளர்கள் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஸ்டெர்லைட் ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் சார்பில், நேற்று வெள்ளிக்கிழமை இந்த மனு வழங்கப்பட்டதாக, செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

மத்திய சுற்று சூழல் துறை அமைச்சர் ஹர்ஷ வர்தனையும், சுரங்கத் துறை இணையமைச்சர் ஹரிவாய் சௌத்திரியை யும் சந்தித்து கோரிக்கை கள் அடங்கிய மனுவை அளித்துள்ளனர்.

ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டுள்ளதால் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தூத்துக்குடியில் அமைந்துள்ள ஸ்டெர்லைட் ஆலையினால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதாகவும் சுற்றாடலில் வசிக்கும் மக் கள் புற்று நோய் மற்றும் மூச்சு திணறல் உள்ளிட்ட நோய்களுக்கு ஆளாவதாக வும் நிலத்தடி நீர் பாதிக்கப் படுவதாகவும் கூறி பொது மக்கள் தொடர் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்த போராட்டம் 100 ஆவது நாளை எட்டிய போது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்பட்டது. இதன்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததோடு பலர் படு காயமடைந்தனர். இதையடுத்து ஸ்டெர்லைட் ஆலையும் சீல் வைக்கப்பட்டது.

இந்நிலையில், 13 பேரின் உயிரிழப்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்ட நிலையில், அது தொடர்பில் விசாரிக்க சிறப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், ஸ்டெர்லைட் நிறுவனம் ஆலையை திறக்க கோரி வரும் நிலையில் மேற்படி தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி மனு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# கருங்கடல் எல்லையில் வெள்ளப்பெருக்கு

## 6 பேர் உயிரிழப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவுக்கு தெற்காகவுள்ள கருங்கடல் எல்லைப் பகுதியில் ஏற்பட்ட பாரிய வெள்ளப் பெருக்கு காரணமாக 6 பேர் உயிரிழந்த னர்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இந்த அனர்த்தம் இடம்பெற்றதாக இன்டர்வெக்ஸ் மற்றும் ஏனைய செய்தி முகவர் நிறுவனங்கள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளன.

இதன்போது நபர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை தொடக்கம் அங்கு பெய்யும் தொடர்ச்சியான கனத்த மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கரையோரப் பிராந்தியத்தில் உள்ள சில நகரங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், டுவாப்ஸே நகரப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது 6 பேர் உயிரிழந்தமை தெரியவந்துள்ளதாக அனர்த்த சேவை அமைச்சு தெரிவித்துள்ளது. (7)

# தமிழகத்தில் ஏன் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படவில்லை தேர்தல் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் அழைப்பாணை

தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் தாமதமாவதற்கான காரணத்தை தெரிவிக்குமாறு கோரி, மாநில தேர்தல்கள் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் நடத்தப்படவேண்டிய தமிழக உள்ளாட்சி தேர்தல்கள், இதுவரையில் நடத்தப்படவில்லை. இந்நிலையில், விரைவில் தேர்தலை நடத்துமாறு கோரி உச்சநீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

இதன்போது வழக்கை விசாரித்த நீதிபதிகள், தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படுவதில் காணப்படும் தாமதம் மற்றும் அதற்கான காரணத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டு இவ்வாறு அழைப்பாணை அனுப்பியுள்ளனர்.

இந்த வழக்கு ஏற்கனவே பலமுறை விசாரணைக்கு வந்தபோது, இது போன்ற நோட்டீஸ் மாநில அரசுக்கு அனுப்பப்பட்டது. எனினும், தொகுதி மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடையவில்லை என்றும், அதன் பின்னர் தேர்தல் நடத்தலாம் என்றும் தமிழக தேர்தல் திணைக்களம் கூறியிருந்தது.

இந்நிலையில், நேற்று பிறப்பித்துள்ள இந்த நோட்டீஸில் எதிர்வரும் நான்கு வாரங்களுக்குள் தமிழக தேர்தல்கள் ஆணையகம் பதில் வழங்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளது. (7)

# ஜோர்தானில் … 20 பேர் உ…

ஜோர்தானில் சாக்கடல் அருகே இடம்பெற்ற வெள்ளப் பெருக்கில் குறைந்தது 20 பேர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் வியாழக்கிழமை பேருந்து ஒன்றில் பயணித்தவர்களே வெள்ளத்தில் சிக்கிக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

37 மாணவர்கள் மற்றும் ஏழு பாடசாலை உத்தியோகத்தர்களை ஏற்றிக் கொண்டு சென்ற அந்தப் பேருந்து ஜாரா மயீன் வெண்ணீரூற்று உள…

இந்த அனர்த்த…

அனர்த்தத்தி…

சிலர் பலத்த க…

போது, மீட்புப் ப…

ளதுடன், ஜோர்…

பட்சத்தில் உலா…

# ஜமால் கஷோக்கியி… நீதி கோரி கவனயீர்…

(இஸ்தான்புல்)

துருக்கியில் கொல்லப்பட்ட சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் கொலைக்கு நீதி கோரி துருக்கியில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

ஜமால் கஷோக்கியின் மரணத்திற்கு நீதி கோரி துருக்கி - இஸ்தான்புல்லிலுள்ள சவுதி அரேபியத் துணைத் தூதரகத்திற்கு எதிரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

துணைத் தூதரகத்திற்கு எதிரில் ஒன்று கூடியவர்கள், கொலை செய்யப்பட்ட கஷோக்கியின் புகைப்படத்தை தாங்கியவாறு, மெழுகுவர்த்திகள் ஏந்தி அஞ்சலியும் செலுத்தினர்.

இதன்போது, சவுதி முடிக்குரிய இளவரசர் முஹம்மது பின் சல்மா னைப் போன்று வேடமிட்டு அவரிடம் நீதி கோருவது போன்றும் பாவ னையும் செய்தனர்.

அங்கு கூடியவர்கள் கஷோக் கியின் கொலைக்கு நீதி வேண்டும் என்றும், இதற்கு காரணமானவர் கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கோரி க்கை விடுத்திருந்தனர்.

இதன்போது, எகிப்திய அரசியல் வாதியும், ஜமால் கஷோக்கியின் நண்பரு மான அய்மன் வொவுர் கூறுகையில், குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலம் நீதி நிலை நாட்டப்பட வேண்டும். நீதி கிடைக்கும் வரையில் நாம் ஓயமாட்டோம். தொடர்ந்து போராடுவோம். நாம் ஜமால் கஷோக்கியின் மரணத்திற்கு நீதியைப்…



இந்நி…

க்கப்படு…

சல்மான்…

# சீனாவில் … 14 சிறுவர்க…

(பீஜிங்)

சீனாவில் ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த சிறுவர்கள் 14 பேர் பெண்மணியொருவரின் கத்திக்குத்திற்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய சீனா…

நேற்று முன்…

இடம்பெற்றுள்ளத…

ஆரம்பப் பா…

உடற்பயிற்சியை…

கொண்டிருந்தபோ…

# ஜமால் கஷோக்கியின் கொ… சவுதி இளவரசருக்கு தெ…

## அமெ.ஜனாதிபதி ட்ரம்ப் ச…

(வோஷிங்டன்)

சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் கொலையில் சவுதி இளவரசருக்கு தொடர்பிருக்கலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

சவுதி அரேபிய ஊடகவியலாளரான ஜமால் கஷோக்கி இஸ்தான்புல்லில் உள்ள சவுதி துணைத் தூதரகத்தில் கொல்லப்பட்டார். அவரது உடல் பாகங்கள் தூதரக அதிகாரி ஒருவரின் வீட்டுக் கிணற்றில் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.





கஷோக்கி கொலை தொடர்பான விசாரணை… என அ…

# வெளிநாடு

## ல் வெள்ளம் உயிரிழப்பு

ருற்று உள்ள பகுதியில் பயணித்த போது
த அனர்த்தத்தை எதிர்கொண்டது.
அனர்த்தத்தின் போது மீட்கப்பட்டவர்களில்
பலத்த காயமடைந்துள்ளனர். இதன்
து. மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்
டன். ஜோர்தான் கோரிக்கை விடுக்கும்
ந்தில் உலங்குவானூர்திகளை அனுப்பத்
தயாராக இருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அந்த பகுதியில் இருந்து 24 பேர் வரை பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (7)

## கியின் கொலைக்கு யீர்ப்பு போராட்டம்



நீதியைப் பெற்றுக் கொடுப்போம்.

இந் நிலையில், கொலைக்கு கார ணமானவர்கள் கடுமையாக தண்டிக்கப்படு வார்கள் என சவுதி முடிக் குரிய இளவர சர் முஹம் மது பின் சல்மான் கூறியி ருந்தமையும் குறிப்பிடத்த க்கது. (7)

# மறைமுக மரண தண்டனைக்கு ஜமால் பலியாகி இருக்கிறார்

## ஐ-நா-குற்றச்சாட்டு




(ஜெனிவா)

சவுதி ஊடகவியலாளர் ஜமால் மறைமுக மரண தண்டனைக்கு பலியாகி இருக்கிறார் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து தன்னிச்சையாக விதிக்கப்படும் மரண தண்டனை குறித்து புகார் தெரிவிக்கும் சிறப்பு பதவியில் இருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆக்னஸ் கால்மார்ட் கூறும் போது, "சவுதி ஊடகவியலாளர் ஜமாலுக்கு அளித்திருப்பது மறைமுக மரணத் தண்டனையாகும். முதலில் ஜமால் தூதரக அலுவலகத்தில் வைத்து கொல்லப்பட்டார்.

அதுவும் சவுதியின் தூதரக அலுவலகம். இரண்டாவது ஜமால் கொலையில் தொடர்புடைய அனைவரும் மாயமாகினர். அவர்கள் அனைவரும் சவுதியை சேர்ந்தவர்கள். இது அனைத்தும் ஜமால் மறைமுகமாக மரண தண்டனைக்கு பலியாகி இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. இது அனைத்திற்கும் சவுதி அரசு தான் காரணம் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது" என்றார்.

துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லிலுள்ள சவுதி தூதரக அலுவலகத்தில் கொல்லப்பட்ட ஜமாலின் கொலை வழக்கில் தொடர்புடைய சவுதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரை துருக்கி கடந்த வாரம் வெளியிட்டது.

ஜமாலை சவுதிதான் கொலை செய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன், இதற்கான வீடியோ மற்றும் ஓடியோ ஆதாரத்தை துருக்கி வெளியிட்டது.

துருக்கியிலுள்ள சவுதி அரேபிய தூதரகத்தின் உள்ளே ஜமாலின் விரல்கள் துண்டிக்கப்பட்டு சித்திர வதை செய்யப்பட்டு, பின்னர் அவரது தலை துண்டிக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதாகவும் துருக்கி குற்றம் சாட்டியது.

ஜமால் கொல்லப்பட்டதை தொடர்ந்து மறுத்து வந்த சவுதி, துருக்கி வெளியிட்ட தொடர் ஆதாரங்களை தொடர்ந்து ஜமால் கொல்லப்பட்டதை சவுதி ஒப்புக்கொண்டது.

இந்த விவகாரம் சர்வதேச அளவில் சவுதிக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (7)

## ஜமால் கஷோக்கி கொலையை உறுதிப்படுத்தும் ஒலி நாடா!



(ரியாத்)

சவுதி ஊடகவியலாளர் ஜமால்கஷோக்கியின்கொலை தொடர்பான ஒலி நாடாக்களை CIA பணிப்பாளர் கினா ஹெஸ்பெல் செவி மடுத்துள்ளதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த வாரம் துருக்கிக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த கினா ஹெஸ்பல் குறித்த ஒலிநாடாவை செவிமடுக்க அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த இரண்டாம் திகதி துருக்கியின் இஸ்தான்புல்லிலுள்ள சவுதி தூதரகத்தில் வைத்து சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி கொல்லப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. (7)

## ல் கத்திக்குத்து; ர்கள் படுகாயம்!

டுள்ளனர்.
த்திய சீனாவின் ஜொங் கிங் மாவட்டத்தில்
று முன்தினம் இந்த சம்பவம்
பெற்றுள்ளது.
ஆரம்பப் பாடசாலை மாண வர்கள்
பயிற்சியை முடித்துவிட்டு திரும்பிக்
ண்டிருந்தவேளை பெண் ணொருவர்
கத்தியால் அவர் களைத் தாக்கினார் என அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

பாடசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் பணியாளர்களும் அந்த பெண்ணை மடக்கி பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 14 சிறுவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவில் பாடசாலை மாணவர்கள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் இடம்பெற்றுவரும் நிலையிலேயே இந்த தாக்குதலும் இடம்பெற்றுள்ளது.

ஏப்ரல் மாதம் இடம்பெற்ற இவ்வாறானதொரு தாக்குதலில் 9 மாணவர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## கொலைப் பின்னணியில் த தொடர்பிருக்கலாம் ப் சந்தேகம்



விசாரணை திருப்தி கரமாக இல்லை என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

ஏற்கனவே குற்றம் சாட்டியிருந்தார்.

மேலும் கஷோக்கி கொலையில் தொடர்புள்ள அதிகாரிகளின் விசா இரத்து செய்யப்படும் என்றும், இது குறித்து துருக்கி மற்றும் சவுதியில் அமெரிக்க அதிகாரிகள் விசாரணை நடத்துவார்கள் என்றும் அமெரிக்கா கூறியிருந்தது.

இந்நிலையில், இந்த கொலை சம்பவத்தில் சவுதி இளவரசர் முகம்மது பின் சல்மானுக்கு தொடர்பிருக்கலாம் என்று ஜனாதிபதி ட்ரம்ப் விமர்சித்துள்ளார் என அமெரிக்க ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.(7)

# கஷோக்கி திட்டமிட்டே கொலை; ஒப்புக்கொண்ட சட்டத்தரணி



(ரியாத்)

சவுதி அரேபியாவின் ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி திட்டமிட்டே கொலை செய்யப்பட்டதாக சவுதி அரச சட்டத்தரணி அல்-ஏக்பாரியா தெரிவித்துள்ளார்.

சவுதி -துருக்கி கூட்டு நடவடிக்கைப் படைத் தரப்பு அளித்த தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர்கள் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளதாக சவுதி அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று வாரங்களுக்கு முன்பு, ஜமால் கஷோக்கி இஸ்தான்புல்லில் உள்ள சவுதி துணைத் தூதரகத்துக்கு வந்து திரும்பிச் சென்றுவிட்டதாக ஆரம்பத்தில் சவுதி அரசு கூறி வந்தது.

பின்னர் அங்கே நடந்த ஒரு கைகலப்பில் அவர் இறந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது அது திட்டமிட்ட கொலை என்றும் சவுதி அரச சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

ஜமால் கஷோக்கி துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்தில் கொல்லப்பட்ட சம்பவத்தின்போது பதிவு செய்யப்பட்டதாக நம்பப்படும் ஒலிப்பதிவை அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. இயக்குநர் ஜினா ஹெஸ்பல் செவிமடுத்துள்ளதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது.

இந்தவார தொடக்கத்தில் துருக்கி சென்றிருந்த போது அந்த ஒலிப்பதிவை கேட்பதற்கு ஜினா அனுமதிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந் நிலையில், தாம் செவிமடுத்த விபரங்கள் குறித்து அவர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடம் விபரிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (7)

# ஜனாதிபதியை கொல்லச்சதி நாலகவுக்கு விளக்கமறியல்!

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவை விளக்கமறியலில் வைக்க உத்தர விடப்பட்டுள்ளது.



ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய கொலைத் திட்டம் தொடர்பில் ஐந்தாவது நாளாக வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு சென்றிருந்த போது அவர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து நாலகவை அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆயிரம் ரூபா கோரும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஆசிரிய பயிலுநர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்





(ஹற்றன்)

ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வைக் கோரி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுவரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய பயிலுநர்கள் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் காலை 8 மணியளவில் ஆரம்பமான குறித்த போராட்டத்தில், சுமார் 300 இற்கு மேற்பட்ட ஆசிரிய பயிலுநர்கள் கலந்து கொண்டனர். இதன்போது அவர்கள் சம்பள உயர்வை கோரும் வகையான பல வாசகங்கள் எழுதிய சுலோகங்களை ஏந்திய வண்ணம் தங்களது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மேலும், இப்போராட்டத்தில் கலந்துகொண்ட ஆசிரிய பயிலுநர்கள் தாம் இப்போராட்டத்தை முன்னெடுத்ததற்கான நோக்கம் குறித்து தெரிவிக்கையில்,

தொழிலாளர்களின் சம்பள உயர்வாக ஆயிரம் ரூபாவை கோரி தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவும் இவர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் ஆதரவு தெரிவித்து இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுத்தோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கடமை தவறிய சிறையதிகாரி பணி நீக்கம்

(கொழும்பு)

அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் அதிகாரி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் அங்குண கொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் கைதிகள் சிலர் சிறைச்சாலை கண்காணிப்புப் கோபுரத்தின் மீதேறி ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

இதன்போது உரிய நடவடிக்கை எடுக்காமல் கடமை தவறியதன் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த சிறைச்சாலைகள் ஆணையாளர், இது தொடர்பில் மேலும் நான்கு அதிகாரிகள் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

# இராணுவத் தளபதி மகேஷை சந்தித்தார் போலந்து தூதரக பாதுகாப்பு இணைப்பதிகாரி

(கொழும்பு)

இலங்கைக்கான போலந்து தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பதிகாரி கேர்ணல் ரடோஸ்லே க்ராப்ஷ்கீ இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை சந்தித்தார்.



இந்த சந்திப்பு இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இருவரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்கு இடையிலான இராணுவ உறவு மற்றும் முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியதுடன் நினைவுச்சின்னங்களையும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர். (இ-7)

# பிரதமரின் விருப்பு, வெறுப்பின் படியே ஐக்கிய தேசிய கட்சி பயணிக்கின்றது

## -டிலான் பெரேரா சுட்டிக்காட்டு-



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டதைப் போன்று ஐக்கிய தேசியக் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட போது காணப்பட்ட கொள்கையிலிருந்து விலகியுள்ளது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் கொள்கைகளை உருவாக்கி செயற்படுகின்றார் எனவும் சுட்டிக் காட்டினார்.

சுதந்திர ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமருக்கு ஆதரவாக செயற்பட்டுவரும் சரத் பொன்சேகா ஜனாதிபதியின் உளநலத்தை சந்தேகத்திற்குட்படுத்தி கருத்துக்களை வெளியிடுகின்றார். இவை அரசாங்கத்திற்கிடையிலும் பிளவு ஏற்பட்டுள்ளமையினையே எடுத்துக்காட்டுகின்றன.

எனவே மக்களுக்கான சேவையை வழங்குவதற்கு இடையூறாக இருந்து வரும் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகுவதுடன், தனியொரு கட்சி ஆட்சி அமைக்கும் அரசாங்கம் உருவாக வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## விமர்சனங்களை அலட்சியம் செய்யலாமா?

வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று சிலர் பின் விளைவுகளைப் பற்றியும் சம்பந்தப்பட்டவர்களின் மனம் புண்படுமே என்பது பற்றியும் கவலை கொள்ளாமல் விமர்சனம் செய்து விடுகிறார்கள்.

“இவன் செய்தது தவறு” என்பார்கள்.

“அவன் ரொம்ப மோசம்” என்பார்கள்.

இப்படி விமர்சனங்கள் பெரும்பாலும் விமர்சனங்களாக இல்லாமல் தாக்கும் ஆயுதங்களாகவே அமைந்து விடுகின்றன.

ஆக உலகின் விமர்சனம் என்பதே பெரும்பாலும் நடுநிலையில்லாமல் சுயவிருப்பு வெறுப்புகளைப் பிறர் கருத்தில் திணிப்பதாகும் என்பது தெளிவு. கண்,காது,மூக்கு வைத்துத் தன் மன விகற்பங்களை வெளிக்காட்டுவதே இன்றைய விமர்சனம் என்பதும் உண்மையே.

ஒரு பெண்ணின் நடத்தையைப் பற்றியும் ஆணின் நேர்மையைப் பற்றியும் வாய் கூசாமல் கண்டபடி விமர்சனம் செய்பவர்கள் உலகில் ஏராளமாய் இருக்கிறார்கள்.

ஒரு பகுதியினரோ, சற்று வீரியம் குறைந்த வகையில் அதாவது பிறர் செய்கையில் குறை கண்டுபிடித்துச் சொல்வதிலேயே குறியாக இருப்பார்கள்.

இந்த உண்மையின் அடிப்படையில் பார்க்கும் போது விமர்சனத்தில் தாக்குண்டவர்கள் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் தரலாகாது.

“ஐயோ! இப்படி அபாண்டமாகச் சொல்கிறார்களே!” என்று தலைமீது கை வைத்துக் கொண்டு உட்கார்ந்தோமானால் போயிற்று; விமர்சனங்கள் மேலும் பலம் பெற்று பன்மடங்கு உற்சாகமடைந்து தங்களது பிரசார இயந்திரத்தை முடுக்கிவிட ஆரம்பித்து விடுவார்கள்.

எனவே நம்மைப் பற்றிய விமர்சனங்களை நம்மால் மனதளவில் புறக்கணிக்க முடிகிறதோ இல்லையோ,அவற்றை நாம் சற்றும் அலட்சியம் செய்வதில்லை என்று காண்பித்துக் கொள்ளவாவது வேண்டும்.

யார் என்ன பேசினாலும் மனச்சாட்சிக்குச் சரி என்று படுவதை நான் செய்வேன்-எவர் விமர்சனங்களும் என்னைத் தடை செய்ய முடியாது என்று நம் வட்டத்தில் சொல்லிக் கொள்ளவாவது வேண்டும்.

நம் ஓட்டத்தைத் தடைசெய்ய முயலும் பிறரது செயலுக்கு நாம் வைக்கக்கூடிய முதல் வேட்டு இதுதான்.

நாம் வாழ்க்கை எனும் வண்டிச் சக்கரங்களின் இடையே விமர்சனம் எனும் கட்டையை நீட்டி சக்கரத்தின் ஓட்டத்தை நிறுத்திவிட நாமே இடந்தரக்கூடாது.மாறாக அதைப் பொருட்படுத்தாமல் துரித கதியில் இயங்கினோமானால் விமர்சனங்கள் எனப்படும் கட்டைகள் தூள் தூள்!

விமர்சனங்களை அலட்சியம் செய்யும் அதேநேரத்தில்நாம் இரண்டு உண்மைகளை நினைவிற் கொள்வது நல்லது.

முதலாவது அந்த விமர்சனங்களில் எந்த அளவுக்கு உண்மை உள்ளது என்பதை மனச்சாட்சியின் துணையுடன் ஆராய்வது.

இரண்டாவது

நான்கு பேர் கண்டபடி விமர்சனம் செய்தாலும் நம் சார்பாக நாம் தூண்டி விடாமலேயே “சேச்சே! நீங்கள் சொல்வது தவறு” என நமக்கே வாதாடி அவர்கள் வாயை அடைக்க உலகம் வலிய முன்வரும் அளவுக்கு நாம் வாழ்ந்து காட்டுவது!

லேனா தமிழ்வாணன்

# அரசின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்



## கூட்டு எதிர்க்கட்சி எம்.பி. டலஸ் உறுதி

(கொழும்பு)

அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டு எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் அமைப்பு உருவாக்குவதற்கு தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அரசாங்கத்திற்கு கிடைக்காது.

அவ்வாறான ஓர் சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு நாம் தயாரில்லை. மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இல்லாமல் செய்யும் வல்லமை எமக்கு உண்டு.

நாட்டின் 9 மாகாண சபைகளில் 6 மாகாணசபைகள் கலைக்கப்பட்டுள்ளன. இன்னும் 4 மாதங்களில் மேலும் 2 மாகாணசபைகள் கலைக்கப்பட உள்ளன.

மாகாணசபைகள் கலைக்கப்பட்ட போதிலும் மாகாணசபை நடைபெறக்கூடிய சாத்தியங்கள் எதுவும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# போலி நாணயத்தாள்களுடன் மாலிநாட்டு பிரஜை கைது

(கொழும்பு)

போலி நாணயத்தாள்களை வைத்திருந்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் பிலியந்தலை, மடபாத்த பிரதேசத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். வலான ஊழல் எதிர்ப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து போலி 5000 ரூபா நாணயத்தாள்கள் நான்கும் ஆபாச படங்களுடனான கைத்தொலைபேசியும் கைப்பற்றப்பட்டுள்ளது. 28 வயதுடைய மாலி நாட்டுப் பிரஜை ஒருவரே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். (7)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

கொஸ்கொட, தூவமோதர பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கி ஒன்றுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொஸ்கொட பொலிஸாரிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட சோதனையின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சோதனையின் போது கட்டில் மெத்தைக்கு கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட போர 12 என்ற துப்பாக்கி ஒன்றே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கொஸ்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

## சவுக்கடி இரட்டைப்படுகொலை

# ஓராண்டு பூர்த்தியாகும் நிலையில் நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டம்





(ஏறாவூர்)

மட்டக்களப்பு, சவுக்கடி பகுதியில் தாயும் மகனும் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகும் நிலையில் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க கோரியும் குற்றவாளிகளுக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் ஆஜராகவேண்டாமென வலியுறுத்தியும் கவனயீர்ப்பு போராட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, காந்திபூங்கா முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை ஒன்றுகூடிய சவுக்கடி பிரதேச மக்கள் மற்றும் ஏனைய பகுதியை சேர்ந்த பொதுமக்கள் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26ஆம் திகதி சவுக்கடி பகுதியில் தாயும் மகனும் கடுமையான முறையில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்ததுடன் அங்கிருந்த தங்க நகைகளும் கொள்ளையிடப்பட்டிருந்தன.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவரும் சவுக்கடியை சேர்ந்த ஆட்டோச் சாரதியும் கைது செய்யப்பட்டிருந்ததுடன் கொள்ளையிடப்பட்டிருந்த நகைகளும் மீட்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட கொலையாளிகள் என சந்தேகிக்கப்படுவோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த கொலையாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கி, இவ்வாறான நிகழ்வுகள் இனிமேல் நடைபெறாத வகையில் சட்டத்துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்களும் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர். (7)

# சிவனொளிபாதமலை பருவகாலம் டிசெம்பர் 22இல் ஆரம்பம்

(கொழும்பு)

சிவனொளிபாத மலையின் பருவகாலம், டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகி, வெசாக் தினத்துடன் நிறைவடையவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

பருவகாலத்தில் யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்கள், சிவனொளிபாத மலையில் சுற்றாடலை மாசுபடுத்தாது நடந்துகொள்வது அவசியம் என்று, நுவரெலியா மாவட்ட செயலாளர் ரோஹன புஷ்பகுமார வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பிலான கலந்துரையாடல், நல்லதண்ணிநகரின்பொதுச்சுகாதார அதிகாரிகளின் கேட்போர் கூடத்தில், கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், பொதுச் சுகாதார அதிகாரிகள், நல்லதண்ணி பொலிஸார், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகள், மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். இதில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். (7)

# விகாராதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு, செங்கலடி ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, மட்டக்களப்பு நிர்வாக உத்தியோகத்தர்களால் ஆர்ப்பாட்டமொன்று, நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

ஏறாவூர்ப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட மைலம்பாவெளியில் மரம் ஒன்றை கடந்த புதன்கிழமை வெட்டுவது தொடர்பில் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமனரத்ன தேரர், கடமையில் ஈடுபட்டிருந்த ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் என். வில்வரெட்ணத்தின் மீது தாக்குதல் நடத்தினார்.

விகாராதிபதியின் செயலை கண்டித்து, இலங்கை அரச நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்க மட்டக்களப்பு மாவட்ட கிளை, ஐக்கிய கிராம சேவையாளர் சங்கம் என்பன இணைந்தே, இவ்வார்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். "விகாராதிபதியின் செயற் பாட்டுக்கு, நல்லாட்சி அரசாங்கம் துணை போகின்றது" என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில், ஊர்வலகமாகச் சென்றவர்கள், மட்டக்களப்பு மாவட்ட செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (7)

# இடைக்கால அரசாங்கத்தை அமைக்க வேண்டியது அவசியம்

## அதுரலியரத்ன தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்க இடைக்கால அரசாங்கமொன்றினை அமைக்க வேண்டியது அவசியமென நாடாளுமன்ற உறுப்பினர் வணக்கத்திற்குரிய அதுரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

இராஜகிரிய பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் அனைத்து மக்களும் பொருளாதார பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதுடன் நாடும் பின்னடைவை நோக்கி நகர்ந்து செல்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகையால் நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்பி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டுமென்றால், நிச்சயம் இடைக்கால அரசாங்கமொன்றை அமைக்க வேண்டியது அவசியமென அதுரலிய ரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார். (7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 92 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 140 | 150 | 200 |
| தக்காளி | 160 | 100 | 130 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 150 | 100 | 110 | 160 |
| கரட் | 140 | 140 | 150 | 240 |
| பூசணி | 80 | 40 | 40 | 60 |
| புடோல் | 160 | 90 | 130 | 120 |
| வாழைக்காய் | 80 | 60 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 95 | 100 | 120 |
| பாகற்காய் | 240 | 160 | 240 | 250 |
| வெண்டிக்காய் | 150 | 90 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 200 | 130 | 150 | 200 |
| லீக்ஸ் | 100 | 80 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 120 |
| கறிமிளகாய் | 200 | 80 | — | 200 |
| முருங்கைக்காய் | 240 | 90 | 140 | 120 |
| போஞ்சி | 250 | 210 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | — | 180 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 420 | 310 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 110 | 180 | 240 |
| வெங்காயப்பூ | 250 | 100 | — | 200 |
| முள்ளங்கி | 80 | 30 | — | 80 |
| பொன்னாங்காணி | 50 | 20 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 15 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 120 | — | 100 |

# விவசாய பொருளாதார திட்டத்தை நோக்கி நாம் துரிதமாகப் பயணிக்க வேண்டும்

## -ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு-





(கொழும்பு)

சில வருடங்களாக நாட்டில் நிலவிய வரட்சி நிலைமை நீங்கி மழை கிடைக்கப் பெற்றுவரும் இந்தச் சந்தர்ப்பம் விவசாயத் துறையில் புதிய மாற்றமொன்றுக்காக தயாராகுவதற்கு பொருத்தமான சந்தர்ப்பமாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களை மட்டுப்படுத்தி சுய முயற்சியில் முன்னேற விவசாய பொருளாதார நிகழ்ச்சித் திட்டத்தை நோக்கி நாம் துரிதமாக பயணிக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

கடுபொத, பொத்துவெவ, ஷைலதலாராம ரஜமகா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தாது கோபுரத்தை திறந்து வைக்கும் புண்ணிய நிகழ்வு ஜனாதிபதியின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச மக்கள் முன்னிலையில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.



காலநிலை மாற்றத்தினால் முகங்கொடுக்க வேண்டியுள்ள சவால்களை விளங்கி நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அனைவரும் கூட்டு முயற்சியில் இணைய வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வடமேல் மாகாண கடுகம்பொல உப தலைமை சங்கநாயக்க தேரரும் பொத்துவெவ ஸ்ரீஷைலதலாராம ரஜமகா விகாரையின் விகாராதிபதியுமான சங்கைக்குரிய போகஹபிட்டியே தம்மிஸ்ஸர தேரர் மற்றும் அமைச்சர் எஸ்.பி.நாவின்ன, முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜெயசேகர, வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தஸநாயக்க, அதுல விஜேசிங்ஹ, சாந்த பண்டார ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேநேரம் ஜனாதிபதி விகாரை வளாகத்தில் இடம்பெற்ற கடுபொத பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு மணமக்களின் திருமண நிகழ்வுகளுக்கும் கையொப்பமிட்டார். (7)

# உனா மக்கோலியின் நினைவு மாநாட்டு மண்டபம் திறப்பு



ஐக்கிய நாடுகளின் 73 ஆவது தினத்தை நினைவு கூரும் நிகழ்வு கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட உனா மக்கோலியின், நினைவு மாநாட்டு மண்டபத்தை திறந்து வைத்தார். (7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 8 விதி எண் 7

சனி, கேது ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கருணையின் கண்களாவார்கள். நல்ல எண்ணம், செயல்கள் உடையவர்கள். இரகசியம் காப்பதில் வல்லவர்கள். எங்கு சென்றாலும் நல்ல பெறெடுப்பார்கள். மலர்களை விரும்பக் கூடியவர்கள். அதிகமான கற்பனை வளமும், சிந்தனை சக்தியும் உடையவர்கள். கலைகளில் தேர்ச்சியும் சிறப்பும் அடைவார்கள். எழுத்தாற்றல், பேச்சாற்றல் மிக்கவர்கள்.

நிர்வாகத்திறன் உடையவர்கள். மற்றவர்களின் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்கள். அனுபவத்தால் மனம் அடிக்கடி சோர்ந்து பின்னர் தெளி வடைவார்கள். திடீரென்று மன வேதனையில் வாடுவார்கள். இவர்கள் யாரிடமும் தன் கவலையைக் கூறாமல் மனதிற்குள் வைத்தே புழுங்குவார்கள். நல்ல எண்ணம் கொண்ட இவர்களுக்கு அடிக்கடி சோதனைகள் வருவதால் தன்னுடைய விதியை நினைத்து நொந்து கொள்வார்கள். இவர்கள் மனம் இயற்கைக் காட்சிகள், மலர்கள், மலைப்பிரதேசங்களைப் பார்ப்பதால் தெளிவடையும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாதவர்கள். சிலநேரம் தனிமையில் சிந்தித்துக் கொண்டேயிருப்பார்கள். கலை, கலாசாரம், பண்பாடு, சமயம் போன்றவற்றில் பிடிப்புக் கொண்டவர்கள். எப்போதும் ஆன்மீகம், தெய்வீக விடயங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள்.

எழுத்தாலும், பேச்சாலும் புகழ் அடைவார்கள். சிலநேரம் முன்கோபத்தாலும், அபிப்பிராயப் பேதத்தாலும் மனக்குழப்பம் அடைவார்கள். மற்றவர்களிடம் மோதல் போக்கைக் கடைப்பிடிப்பார்கள். அளவு கடந்த ஆன்மீக நாட்டமிருக்கும். பல சோதனைகளைக் கடந்து வந்த அனுபவசாலிகள். கலகலப்பாகப் பேசும் இவர்கள் திடீரென்று அமைதியாகிவிடுவார்கள். சட்டம், நாட்டு நடப்பு அறிந்தவர்கள். சோதனையைத் தகர்த்தெறிந்து சாதனையாக மாற்றக் கூடியவர்கள். பிறர் துயர் துடைக்கப் பாடுபடுவார்கள். பொதுக்காரியத்தில் மனமொன்றி பணியாற்றுவார்கள். கற்பனை சக்திகள் அதிகம். வாழ்வில் சில எதிர்பாராத சம்பவங்கள் நிகழும். எவ்வளவு பெரிய திறமைசாலிகள் ஆனாலும் சனி ஆதிக்கத்தால் பாதிக்கப்படுவார்கள். விதி சதா சதி செய்யும் அமைப்புடையவர்கள். எண்ணமும், செயலும் விதியின் போக்கில் பயணிக்கும். மதி மயங்கி விடுவார்கள். விதியின் கோரப் பிடியில் சிக்கித் தவிப்பார்கள். மற்றவர்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்க்கை அமைந்துவிடும். வாழ்க்கை எதிலும் விருப்பு வெறுப்பற்ற நிலைக்கு சென்று விடுவார்கள். சமநோக்குச் சிந்தனையாளர்கள். நிர்வாகத் திறமையிருக்கும்.

ஆத்ம ஞானத்தைப் பெற்றிருப்பார்கள். பல காரியங்களைக் கற்பனையிலேயே செய்து வருவார்கள். பிறரிடம் கலகலப்பாக மனம் விட்டுப் பேசக்கூட மாட்டார்கள். இளமையிலேயே காப்பாளர்களின் ஆதரவு குறைந்துவிடும். தைரியசாலிகள். இன்ப துன்பத்தைத் தனக்குத் தானே அனுபவிப்பார்கள். தன் குறைகளை மற்றவர்களிடம் காட்ட மாட்டார்கள். தூய்மையான உள்ளம் படைத்தவர்கள். கலைப் பிரியர்கள். சுதந்திர மனப்பான்மை உடையவர்கள். கடினமாக உழைத்து உயர்ந்த நிலையை அடைவார்கள். எப்போதும் அமைதியை விரும்பக்கூடிய இவர்கள் புதிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவார்கள். தவறு செய்தவர்களைத் தண்டிக்காமல் மன்னிக்கும் குணம் உடையவர்கள். துன்பத்தில் இருப்பவர்களுக்கு உதவும் குணம் இயற்கையிலேயே இருக்கும்.




அரசியல், நடனம், நாட்டியம், இசை, சித்திரம், சமயம், ஆன்மீகம், பொறியியல் போன்ற துறைகளில் சாதனை செய்வார்கள். வெளிநாட்டுத் தொடர்புகள் மூலம் அனுகூலம் கிட்டும். நல்லவர்களின் நட்புகள் கிடைக்கும். புதிய கருவிகளை மக்களுக்கு அறிமுகம் செய்து வைப்பார்கள். குரு பக்தி, இறைபக்தி மிக்கவர்கள். குழப்பங்கள் நீங்கத் தியானம் செய்வார்கள். வீணான வெட்டிப் பேச்சுக்கள் அதிகமிருக்கும். எல்லாம் தெரிந்தவர்கள் போல நடந்து கொள்வார்கள். அதிர்ஷ்டத்தை நம்பி ஏமாறுவார்கள். தனக்குத் தானே புலம்பிக் கொள்வார்கள்.

மனதில் ஒருவித மேதாவித் தனமிருக்கும். பிறருக்கு அடிபணிய மறுப்பார்கள். மிதமிஞ்சின செயல்களில் ஈடுபட்டுப் பெரும் நட்டமடைவார்கள். எப்போதும் ஆன்மீக விடயங்களைப் பேசிக் கொண்டேயிருப்பார்கள். குருட்டு அதிர்ஷ்டத்தை நம்பி ஏமாறுவார்கள். மற்றவர்களை மதிக்கத் தெரியாதவர்கள். தனக்கென்று தனிவழியைக் கடைப்பிடிப்பார்கள். மற்றவர்கள் பேச்சை செவியில் வாங்கிக் கொண்டு தன்வழி நடப்பார்கள். குழப்பமே மிஞ்சும். வாழ்க்கையில் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டே இருப்பார்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1,10,19,28,6,15,24,5,14,23.

**துரதிர்ஷ்ட திகதிகள்**
8,17,26,4,13,22,31.

**அதிர்ஷ்ட நிறங்கள்**
வெளிர்நீலம், மஞ்சள், பொன்னிறம், வெளிர் பச்சை, வெள்ளை.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**
கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**
ஓபல், அக்கோமரின், டர்க்குவாஷ், ஜேட், வைடூரியம், சந்திரகாந்தக்கல், டெரிடாட், முத்து, நீலக்கல்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

81



பழங்காலத்து தமிழ்க் குடும்பங்கள்

“யாழ்ப்பான மன்னனுக்குத் திறை செலுத்திய வன்னிச் சிற்றரசுகள் அதுபோல் தொடர்ந்தும் போர்த்து க்கீச இராணுவத் தளபதிக்கு திறை செலுத்தவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இப் பிரதேசங்களில் சில வருமான அலுவலர்கள் போர்த்துக்கீசரினால் நியமிக்கப்பட்ட போதிலும், இப் பிரதேசச் சிற்றரசர்களிடமோ, அதிகாரிகளிடமோ எதுவித வரியோ, பணமோ அறிவிட்டதாகவோ கொள்ள இடமில்லை.அரச வருமானங்கள் வருமான அதிகாரிகள் (recebedores or collectors) என்பவர்களால், அதிகார் (adigars)களின் உதவியுடன் அறவிடப்பட்டது”

## போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி. 1505-கி.பி. 1658)

பிரதம இராணுவத்தளபதி, கோவாவிலுள்ள போர்த்துக்கீசர் தலைமை நிலைய அதிகாரியான வைஸ்ரோயுடன் நேரடித் தொடர்புகளை வைத்திருப்பதற்கான உரிமையைப் பெற்றிருந்தான்.

அத்தோடு அவனது அதிகாரத்திற்கு உட்பட்ட நாட்டிலுள்ள கிராமங்களை நன்கொடையாக அல்லது மானியமாகக் கொடுப்பதற்கான உரிமையையும், அதிகாரத்தையும் கொண்டு காணப்பட்டான். யாழ்ப்பாண இராச்சிய மன்னர்கள் பின்பற்றிய நடைமுறைகளையே யாழ்ப்பாண இராணுவத் தளபதியும் பின்பற்றியிருந்தமை பற்றியும் அறிய முடிகிறது.

யாழ்ப்பாணத்தின் முதலாவது இராணுவத் தளபதி பிலிப் த ஒலிவேறா வருமான அலுவலர்களைத் தானே நியமிப்பதற்கான உரிமையையும் தோம்பு எனப்படும் காணிப் பதிவேட்டை ஆரம்பித்துப் பூர்த்தியாக்கும் அதிகாரத்தையும் பெற்றிருந்தான்.

வருமானங்கள், செலவுகள் பற்றிய விடயங்களுக்கும் யாழ்ப்பாணத்தளபதியே பொறுப்பாக இருந்தான். எனினும் மேற்படி விடயம் சம்பந்தமாகக் கொழும்பிலுள்ள வருமானக் கட்டுப்பாட்டு அதிகாரியின் (Vedor) மேற்பார்வையின் கீழே, இடம்பெற வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

சிவில் நிர்வாகம் எவ்வாறு யாழ்ப்பாண இராச்சிய மன்னர் காலத்தில் முதலியார்களின் அதிகாரத்தின் கீழ் இருந்ததோ அதனையே போர்த்துக்கீசர் பின்பற்றினார்கள். ஏற்கனவே யாழ்ப்பாண இராச்சிய அரச நிர்வாகத்தினரால் தேசவழமை (Thesa walamai-A customary law) எனும் சட்ட நிர்வாக முறை பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருந்திருக்கின்றது என்பதனைப் போர்த்துக்கீச ஆவணங்களிலிருந்து அ்றிய முடிகிறது.

போர்த்துக்கீசர் ஆட்சியின் போது, ஏற்கனவே நடைமுறையிலிருந்த மேற்படி சட்ட விதிமுறைகளைத் தொடர்ந்தும் அவர்கள் பின்பற்றினர். மட்டக்களப்புப் பிரதேசத்தில் முக்குவர் (Mukkuwa) சட்டம் நடைமுறையில் இருந்திருக்கி றது.

“முக்குவச் சட்டம் மட்டக்களப்புப் பிரதேசத்தில் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்தது. அதனையே போர்த்துக்கீசர் நடைமுறைப்படுத்தினர்.”

மேற்படி இரு சட்ட விதிமுறைகளைப் போர்த்துக்கீசர் உள்ளூர் அதிகாரிகளின் துணையுடன் பெரும்பாலும் பயன்படுத்தித் தமது நிர்வாக முறையை இலகுவாக வடக்கிலும், கிழக்கிலும் நடைமுறைப்படுத்தினர்.

யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் வருமான நோக்கத்தின் அடிப்படையில் ஏற்கனவே மாகாணப் பிரிவுகளான வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி போன்றவை எதுவித மாற்றமுமின்றி அவ்வாறே நிர்வகிக்கப்பட்டன.

ஏனைய தமிழ்ப் பிரதேசங்களான தீவுப்பகுதிகளும், மன்னார் வன்னிப் பிரதேசங்களும், திருகோணமலை மட்டக்களப்புப் பிரதேசங்களும் எவ்வாறு முன்பு இருந்தனவோ அவ்வாறே போர்த்துக்கீசர் காலத்திலும் இருந்தன. ஆனால் மன்னாரின் வருமானம் தனியாகக் கணக்கிடப்பட்டது.

யாழ்ப்பாண மன்னனுக்குத் திறை செலுத்திய வன்னிச் சிற்றரசுகள் அதுபோல் தொடர்ந்தும் போர்த்துக்கீச இராணுவத் தளபதிக்கு திறை செலுத்தவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இப் பிரதேசங்களில் சில வருமான அலுவலர்கள் போர்த்துக்கீசரினால் நியமிக்கப்பட்ட போதிலும், இப் பிரதேசச் சிற்றரசர்களிடமோ, அதிகாரிகளிடமோ எதுவித வரியோ, பணமோ அறிவிட்டதாகவோ கொள்ள இடமில்லை.

அரச வருமானங்கள் வருமான அதிகாரிகள் (recebedores or collectors) என்பவர்களால், அதிகார் (adigars)களின் உதவியுடன் அறவிடப்பட்டது. நிலவரிகள் (recebedor dosforos) என்ற அதிகாரிகளாற் தனி யாக அறவிடப்பட்டது.

இவர்களுக்கு, நிலவரிமூலம் பெறும் தொகையில் ஒரு வீதம் வழங்கப்பட்டது. மேலும், அதிகார்கள், விதானைகள் (Vidances) ஆகியோரும் வரி அறவிடும் நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்தனர். இவர்களுக்கு தலையார் (talaiyars), பட்டங்கட்டி (pattanguttles) போன்ற வர்கள் துணையாக இருந்தனர்.

போர்த்துக்கீசரின் மேற்படி நிர்வாக முறையானது அவர்களது வருமானத்தை எந்தளவுக்குப் பெருக்க முடியுமோ அந்தளவிற்கு முடுக்கி விடப்பட்டது. இதில் வெற்றி காண்பதற்கு அவர்கள் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள நிலங்களையும் இதர மூலாதாரங்களையும் பற்றிய விபரமான தகவல்களைளத் திரட்ட வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர்.

போர்த்துக்கீசர் படையெடுப்பின் போது யாழ்ப்பாண மன்னர் மக்களிடமிருந்து வரி அறவிடுவதற்காகத் தயாரித்த தோம்பு என்னும் அறிக்கை முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. எனவே போர்த்துக்கீசர் முதலிமார்களினதும் விதானை, அதிகாரி, தலையார், பட்டங்கட்டி போன்ற அனுபவம் மிக்க உள்ளூர் அதிகாரிகளினதும் துணையுடன் தோம்பு எழுதும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

மன்னார் பிரதேசத்திற்கும் யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கும் தனித்தனியான தோம்பு தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் போர்த்துக்கீச அதிகாரிகள் உணர்ந்திருந்தனர்.

மன்னாரில் முத்து வர்த்தகத்திலிருந்துதான் கூடுதலான வருமானம் கிடைக்கப்பெற்றது. நிலத்திலிருந்து அதிக வருமானம் பெற முடியாதென அவர்கள் கருதினர். 1620 இல் லங்கறோட் த செயிஸாஸ் (Lancirate de Seixas) என்ற வரி அறவிடும் அதிகாரி மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டபோது அங்கு நிலங்கள் பதியப்படாமல் இருப்பதைக் கண்டுகொண்டான்.

1627 இல் அம்ப்றோஸியோ த பிறெயிற்றாஸ் த கமோறா (Ambrosio de Freitas de Camora) மேற்படி விடயம் தொடர்பாக மன்னாருக்குப் போகும்படி வைஸ் றோயினால் பணிக்கப்பட்டான்.

அத்தோடு பதிவு செய்யப்படாமல் இருந்த காணிகளை நில உரிமையாளர்களிடமிருந்து பறிமுதல் செய்யும் படி பணிக்கப்பட்டது. அமறோ றொயிஸ் (Amaro Roiz) என்ற அதிகாரி மேற்படி விடயமாக 1635 ஆம் ஆண்டிலும் 1636 ஆம் ஆண்டிலும் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டான்.

இரு தடவையும் நிலவரி இறுப்பதற்கான கட்டளைகளையும் காணிப்பதிவு சம்பந்தமான அறிக்கைகளையுமே அவனால் தயாரிக்க முடிந்தது. ஆனால் இவ் விடயத்தில் மன்னாரை விட யாழ்ப்பாணப் பிரதேசம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அவர்கள் கண்களில் பட்டது.

ஒன்றரை இலட்சத்துக்கு மேலான சனத்தொகையினரில் அநேகமானவர் சிறுசிறு காணிகளுக்கும் தோட்டம் துரவுகளுக்கும் சொந்தக்காரர்களாய் இருந்தமை இங்குள்ளவரின் சுறுசுறுப்பான விவசாய உற்பத்தி முயற்சிகள் என்பன போர்த்துக்கீச அதிகாரிகளை ஈர்த்திழுத்தன.

வருமானத்துறைக்குப் பொறுப்பானவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள வருமானம் சம்பந்தமான நிலைமைகளையும் கவனிக்க வேண்டும் எனக் கோவாவிலுள்ள கவுன்சில் 1620 இல் த செயிஸாஸ் என்னும் வருமான வரி அதிகாரி யாழ்ப்பாணம் சென்று சில வாரங்கள் தங்கியிருந்து நிலுவையாக இருந்த பட்டியல் (Foral) ஒன்றை உள்ளூர் முதலிமார்களின் உதவியுடன் தயாரித்தான்.

(தொடரும்)

# இரத்தினபுரியில் மண்சரிவு 16 குடும்பங்கள் பாதிப்பு



(கொழும்பு)

இரத்தினபுரி பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக தேல பனகம பன்னிலந்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் மலை உச்சிலிருந்து பாரிய அளவிலான கற்கள் மற்றும் பாரிய மரங்கள் மண் திட்டுகள் சரிந்து விழுந்துள்ளன.

குறித்த பிரதேசத்தில் மண்சரிவில் பாதிக்கப்பட்ட 16 குடும்பங்களை சேர்ந்த 63 பேர் தத்தமது உறவினர்களின் இல்லத்தில் தஞ்சமடைந்துள்ளனர். (7)

# நிர்வாக நடவடிக்கைகளுக்குத் தடை பல்கலை.மாணவர்கள் 15 பேருக்கு மறியல்

(கொழும்பு)

தென்கிழக்குப்பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தை, கடந்த இரு வாரங்களாக ஆக்கிரமித்திருந்த 15மாணவர்களை, நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் வந்திருந்த பொலிஸார், நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்திருந்த மாணவர்களைக் கைது செய்தனர்.

தென்கிழக்குப் பல்லைக்கழக நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்திருந்த மாணவர்களை அங்கிருந்து அகன்று செல்லுமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம், ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது.

அதனையும் மீறி, தொடர்ச்சியாக அந்த மாணவர்கள் நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்திருந்தமையால், அவர்களைக் கைது செய்யுமாறு, நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில், குறித்த மாணவர்களைக் கைது செய்யாமல், பொலிஸார், அலட்சியமாக நடந்து கொண்டார்கள் எனக் குற்றஞ்சாட்டியிருந்த பல்கலைக்கழக சமூகத்தினர், பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றில் அண்மையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில், கடந்த புதன்கிழமை இரவு, பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்த பொலிஸார், நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்திருந்த மாணவர்களை அங்கிருந்து அகன்று செல்லுமாறு வலியுறுத்தியிருந்தனர்.

ஆயினும், அம்பாறை மாவட்டத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட்ட பின்னரே, தாம் ஆக்கிரமித்துள்ள இடத்திலிருந்து விலகிச் செல்வது குறித்து தீர்மானிக்க முடியும் என்று, அங்கிருந்த மாணவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து, குறித்த பேச்சுவார்த்தையை ஏற்பாடு செய்து தருவதாக, அந்த மாணவர்களிடம் கூறிச் சென்ற பொலிஸார், நேற்று முன்தினம் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்து, ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருந்த மாணவர்களைக் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த 15 மாணவர்களையும், அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்திய போது, அடுத்த மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (7)

# அலிரொஷான் உட்பட 7பேர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

சட்ட விரோதமான திட்டங்களில்ஈடுபட்ட அலிரொஷான்என அறியப்படும் நிராஜ் ரொஷான் உள்ளிட்ட 7 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு விஷேட மேல் நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அனுமதிப்பத்திரம் இன்றி யானைகளை வேட்டையாடி தந்தங்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அலிரொஷான் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் முன்னாள் பிரதிப்' பணிப்பாளரான உபாலி பத்மசிறி மற்றும் யானைகளை பதிவு செய்யும் ஆவணங்களுக்கு பொறுப்பாக இருந்த பிரியங்கா சஞ்சீவனி ஆகியோரும் அந்த எழுவரில் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# பேருந்தின் சில்லில் சிக்கி ஒருவர் பலி

தியகம பகுதியில் பேருந்து ஒன்றுடன் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கஹதுடுவ. தியகம பகுதியில் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து சென்ற நபர் ஒருவர் மஹரகமவில் இருந்து ஹொரண நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றின் சில்லில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.



நேற்றைய தினம் குறித்த மோட்டார் சைக்கிள் பேருந்தினை முந்திச்செல்ல முற்பட்ட சந்தர்ப்பத்தில் கவிழ்ந்து பேருந்தின் சில்லில் சிக்கியதில் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து சென்ற நபர் உயிரிழந்துள்ளார். விபத்தில் கஹதுடுவ பகுதியை சேர்ந்த 51 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் கஹதுடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1540

## பிரணவ்

எதிரி முன்னாடி வீழ்ந்தாலும் பரவாயில்லை... ஆனா



துரோகி முன்னாடி மட்டும் கெத்தா வாழ்ந்து காட்டனும்

## கல்யாணி

பாடசாலை நாட்களில எழுந்திரிக்க ஆர்ப்பாட்டம் பண்ணுவாங்க



லீவு நாட்களில சீக்கிரமே எழுந்திரிச்சு ஆர்ப்பாட்டம் பண்ணுவாங்க

## தீபன்


வரவு என்பது கண்ணீர் போல ஒரே இடத்தில தான் வருது



செலவு என்பது வியர்வை போல எங்கிருந்தெல்லாமோ வருது

## ஜஸ்வந்த்

படித்தவன் வேலைக்கு சேர்ந்தா கடைசி வரைக்கும் தொழிலாளியாகவே இருக்கான்



ஆனா படிக்காதவன் பத்து வருசத்திலேயே முதலாளி ஆயிடுறான்

## ஜோதிவேல்


பாதி நிறையல, பாதி நிறைஞ்சிருக்கு



உங்கள் பார்வையின் கோணமே உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது

## ருத்ர மனோகர்

பின்னாடி அம்மாவின் பிரார்த்தனையும் முன்னாடி அப்பாவின் வழிகாட்டுதலும் இருந்தால்




வாழ்க்கைப் பயணம் எப்போதும் பாதுகாப்பாகத் தான் இருக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# “சமஷ்டி தீர்வைப் பெற ஓரணியில் திரள்க”

# யாழ்.மண்ணிலேயே குடியிருப்பேன்

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



### ஜனாதிபதி செயலணியல்ல கண்துடைப்பு செயலணி

இதன்மூலம் இராணுவம் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுகிறது என்று காட்டி அவர்களின் பிரசன்னத்தை நியாயப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிக்கு துணைபோகக்கூடாது என்ற காரணத்தினாலும் சர்வதேச சமூகத்தை அபிவிருத்தி என்ற போர்வையில் ஏமாற்றி அரசியல் தீர்வைத் தள்ளி வைக்கும் நோக்கத்துக்கு இடமளிக்கக்கூடாது என்பதற்காகவுமே இந்தக் கண்துடைப்பு செயலணியில் இணைந்து கொள்ளாமல் புறக்கணித்தேன்.

அரசாங்கம் அடுத்த மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் மேலும் கால அவகாசம் கேட்கவே காய்களை நகர்த்தி வருகின்றது. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வட மாகாண சபையினூடாக பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை அரசாங்கம் செய்திருக்கலாம். ஆனால் அவற்றுக்கான போதிய நிதியைத் தராமலும் அதிகார வரம்புகளை ஏற்படுத்தியும் அரசாங்கம் பொருளாதார விருத்தியைத் தடுத்து வந்துள்ள பின்னணியில் தற்போது வட மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடையும் தறுவாயில் அபிவிருத்திக்கான இந்த ஜனாதிபதி செயலணி குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது வரை காலமும் திட்டமிட்டு பிற்போடப்பட்டு வந்த திட்டங்களை இந்த செயலணி மூலம் மேற்கொள்வது எதிர்வரும் மனித உரிமைகள் சபையில் சாதகமான ஒரு நிலைமையினை ஏற்படுத்துவதற்காகும்.

இப்பொழுது ஆளுநர் அரசாங்கத்திற்கு அனுசரணை வழங்கவுள்ளார். வட மாகாண சபையின் எமது தலைமைத்துவத்தை மலினப்படுத்தி எமது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே எமக்கு எதிரான பரப்புரைகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அரசாங்கத்தின் முகவர்களினாலும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

### வட மாகாண சபைக்கு ஆளுநர்களே குந்தகம்

மிகையான அதிகாரத்துடன் மத்திய அரசின் முகவர்களாக கடந்த 5 ஆண்டுகளில் பணியாற்றிய ஆளுநர்களே வட மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு குந்தகமாக இருந்து வந்திருக்கின்றார்கள். எப்போது வட மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடையும் அதன் முழுமையான அதிகாரம் தனது கைக்கு வரும் என்று காத்திருந்தவர் போல தற்போதைய ஆளுநரின் அண்மைய செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. நான் முன்னர் எச்சரித்ததுபோல இனிவரும் காலம் ஆபத்தானது. எமது மக்களை பல்வேறு வழிகளிலும் ஏமாற்றும் நடவடிக்கைகளும் பிழையாக வழிநடத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாம் என்று அஞ்சுகின்றேன். பெரும்பான்மையோர் மேலாதிக்கத்தைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன். எமது மக்கள் விழிப்பாகவும் முன்னெச்சரிக்கையுடனும் இருக்கவேண்டும். வட மாகாண சபைக்கான தேர்தலை காலவரையறை இன்றி பிற்போடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். இதற்கு மக்கள் இடமளிக்கக்கூடாது.

ஒரு நீதியரசராக இருந்து ஓய்வு பெற்றபின் அரசியலுக்கு வந்தவன் நான். எவ்வெவற்றிற்காகப் பாடுபடுவேன் என்று எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு வாக்குக் கொடுத்து வெற்றிபெற்றேனோ அந்த உறுதி மொழிக்கு கட்டுப்பட்டவன் நான். தமிழ் தேசியக் கோட்பாடுகளுக்காக பல்லாயிரக்கணக்கான எமது மக்கள் தமது இன்னுயிர்களை தியாகம் செய்த வரலாறுகளைப் பற்றிக் கேட்டு அறிந்து கொண்டவன் நான். பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைக் கண்டவன் நான். ஆகவே “இதுதான் யதார்த்தம் இதற்கு மேல் எங்களுக்குக் கிடைக்காது” என்று கூறி எமது மக்களுக்கு பொய் கூறி ஏமாற்ற எனக்குத் தெரியாது. இந்த அடிப்படையில்தான் எனது செயற்பாடுகளுக்கும் எனது கட்சியின் தலைமைகளின் செயற்பாடுகளுக்கும் இடையே இடைவெளி அதிகரித்தது. இதனை எனது மக்கள் நன்கு அறிவர். எமக்கு இடையிலான இந்த விரிசல்களுக்காக என்னைப் பழிவாங்க வேண்டும் என்று செயற்பட்டு எமது மக்களின் தலைவிதியுடன் எவரும் விளையாடக்கூடாது. இது தொடர்பில் சில விடயங்களை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

1.முதலமைச்சர் நிதியத்துக்கான நியதிச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் எமது தலைவர்கள் வலியுறுத்தத் தவறியதுடன் எந்தவிதமான முயற்சிகளையும் எடுக்கவில்லை. நாம் தான் இந்த அரசைக் கொண்டு வந்தோம். எதிர்க்கட்சித் தலைவர் பதவி மற்றும் பல முக்கிய பதவிகளையும் வைத்துள்ளோம். ஆனாலும் கூட முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குமாறு வலியுறுத்த எம்மால் முடியவில்லை.

### வடக்கின் தீர்வுத்திட்டம் அதிகாரத் தரப்பால் நிராகரிப்பு

2. மக்களால் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாணசபை ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்திருந்தும் அதைக் கிஞ்சித்தும் சீர்தூக்கிப் பார்க்கவில்லை அதிகாரத்தில் இருந்தோர். குறைந்தபட்சம் அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவினால் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையில் கட்சிகள் சமர்ப்பித்த யோசனைகள் என்ற பின்னிணைப்புடன் கூட எமது முன் வரைவுகளை எவரும் இணைக்க முயன்றிருக்கவில்லை.

3. வடகிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணிக் கூட்டங்களில் பங்குபற்றாமைக்கு நான் முன்னர் கூறிய காரணங்களைக் காட்டி அதைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் எனது முடிவுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கோரியிருந்தேன். வடக்கு- கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரையும் உள்வாங்கியிராத இந்த செயலணியில் நான் அதனைப் புறக்கணித்ததன் பின்னரே எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் நான் சுட்டிக்காட்டிய காரணங்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றி சிந்திக்காது அதற்கொரு அங்கீகாரத்தை வழங்க எமது தலைமைகள் இன்று முற்பட்டுள்ளன. ஆகக்குறைந்தது இந்த செயலணியில் இராணுவத்தினரின் சமமான பங்குபற்றுதல் பொருத்தமற்றது என்று கூட அவர்களால் நிபந்தனை இடக் கூட முடியவில்லை.

4. வட மாகாணசபையில் நாம் ஆட்சியமைத்த கடந்த 5 வருடங்களில் எமது கட்சித் தலைமை எம்மை அழைத்து எமது செயற்றிட்டங்கள் என்ன, எத்தகைய பிரச்சினைகளை நாம் எதிர்கொள்கின்றோம், அவற்றை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றீர்கள், பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இவற்றுக்காக ஏதேனும் செய்ய முடியுமா என்றெல்லாம் கேட்க எத்தனிக்கவில்லை என்பது மனவருத்தத்தை தருகின்றது. எந்த வித அரசியல் அனுபவமும் இல்லாத என்னை அரசியலுக்கு அழைத்து வந்து “நீந்தப் பழகிக் கொள்” என்று நீரில் தள்ளி விட்டதே எனக்கு நேர்ந்த கதி.

5. எந்த ஒரு புதிய அரசும் தனது ஆட்சியின் முதல் இரு வருடங்களுக்குள்ளாகவே தேச நலன் சார்ந்த முக்கிய திட்டங்களை நடைமுறைப்படுத்த எத்தனிக்கும். ஏனெனில் மக்களின் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தியாகவில்லையெனில் அவ்வரசு மீதான மக்களின் வெறுப்பு இத்தகைய முக்கிய திட்டங்கள் நிறைவேற்றப்படுவதைப் பாதித்துவிடும். இன்றைய மத்திய அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்று கூறிக் காலம் தாழ்த்திக் கொண்டுவந்துள்ள அரசியலமைப்பு மாற்றம், உருப்படியான எந்த முன்னேற்றமும் இன்றி அரசாங்கத்தின் ஆட்சி இன்னமும் 1 1/2 வருடங்களில் காலாவதியாகப்போகும் நிலையில் ஆமை வேகத்தில் நகர்ந்துவருகிறது. இந்த அரசியலமைப்பு திருத்த நடவடிக்கையானது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் ஆலோசனை இன்றி அதன் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பங்குபற்றுதல் இல்லாமல் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட வட மாகாண சபையின் பிரதிநிதித்துவம் இன்றி, இரு தனி நபர்களின் விருப்பு வெறுப்புக்களையே ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரதிபலிப்புக்களாக ஜனநாயக விரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

அரசியலமைப்பு மாற்றத்தை இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக்கொண்டு அதில் கலந்துகொண்டதன் மூலம் 70 வருடகால தமிழ்த் தேசிய அரசியல் மற்றும் ஆயுத ரீதியான போராட்டங்கள் மூலம் கட்டி எழுப்பப்பட்ட “சிங்கள- தமிழ்” தரப்புக்களின் பேச்சுவார்த்தை மூலமாகப் “பேரம் பேசும்” நிலைமை இன்று இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வடக்கு- கிழக்கு இணைப்பு, சமஷ்டி என்பவற்றைக் கைவிட்டு ஒற்றையாட்சி முறையை எமது மக்களின் எந்த அங்கீகாரமும் இன்றி ஏற்றுக் கொண்டுள்ளார்கள் எமது தலைவர்கள். பௌத்தத்திற்கு முதலிடம் என்பதையும் இந்த அரசியலமைப்பு உத்தேசத் திருத்தத்தில் ஏற்றுக் கொண்டதன் மூலம் கட்டமைப்பு ரீதியானதும், கலாசார ரீதியானதுமான தொடர் இன அழிப்புக்கான வழியை ஏற்படுத்தியுள்ளார்கள் எம்மவர்கள். இதனையா நாம் “சாணக்கிய அரசியல்” என்று ஏற்றுக்கொள்வது? எமக்கான இலக்கைத் தாமே நிர்ணயித்துவிட்டா தீர்வு முயற்சிகளில் இவர்கள் பங்குபற்றியுள்ளார்கள்? எத்தனை துறைசார் புத்திஜீவிகளின் ஆலோசனைகளை இதற்காக பெற்றிருந்திருக்கின்றார்கள் எமது தலைவர்கள்? மக்களின் எண்ணாங்களும் மனோநிலையும் எமது தலைமைகளால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய ஒரு ஆபத்தான நிலைமையை சீர்குலைக்கக்கூடாது என்பதற்காகவா இப்போது ஒற்றுமையை வலியுறுத்துகின்றார்கள்? எமது இனத்தை அழிப்பதற்கா அல்லது பாதுகாப்பதற்கா ஒற்றுமை வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. எமது இனத்தை அழிந்து போக விடும் ஆலோசனைகளை ஆமோதிக்கும் எம்மவர் அவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் எம்மை அணி சேருமாறு கோருவதும் ஒற்றுமையை வலியுறுத்துவதும் விந்தையாக இருக்கின்றது. எமது அடிப்படைக் கொள்கைகளை அடையாளங்கண்டு அவற்றின் அடிப்படையில் ஒற்றுமை பிறந்தால் அன்றி தவறான அடிப்படைகளில் ஏற்படும் ஒற்றுமை ஆபத்தாக முடியும்.

### ஓரணியில் திரள வேண்டும்

இன்று தமிழ் மக்களுக்கு முன்பாக ஒரு வேண்டுகோளை நான் முன் வைக்கின்றேன். அதாவது தமிழ் மக்களின் தனித்துவத்தின்பால் பற்றுள்ளவர்கள் அனைவரும் வேறுபாடுகளைக் களைந்து, மனித உரிமைக் கோட்பாடுகளை மனதில் நிறுத்தி, கொள்கை அடிப்படையில் ஓரணியில் திரள வேண்டும். காலாதி காலமாக நாம் வலியுறுத்தி வந்த கொள்கைகளின் அடிப்படையில் பிரிக்கப்படாத வடக்கு-கிழக்கில் சமஷ்டி முறையிலானதீர்வு ஒன்றை அடைவதற்கு நீங்கள் யாவரும் முன் வரவேண்டும் என்று அழைக்கின்றேன். அது முடியாது என்று முணுமுணுக்கும் முக்கியஸ்தர்களின் முனகல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சர்வதேச சமூகம் மற்றும் உலகெங்கும் வாழுகின்ற தமிழ் மக்களின் உதவியுடனும் நாம் எமது செயற்பாடுகளை நிறுவனமயப்படுத்தப்பட்ட அரசியல், பொருளாதார நடவடிக்கைகளினூடாக இனிமேல் முன்னெடுக்கவேண்டும். போர்க்குற்ற விசாரணை மற்றும் உண்மையை கண்டறியும் பொறிமுறைகளை ஏற்படுத்த நாம் பாடுபட்டு முயன்று அவற்றுக்கூடாக, தொடர்ந்தும் இருளில் வைக்கப்பட்டுள்ள சிங்கள மக்களுக்கு உண்மைகளை புரியவைத்து எமக்கான தீர்வை வென்றெடுக்க நாம் உழைக்க வேண்டும். முடியாதென்று எதுவுமில்லை. முயன்றால் முடியும்!


என் இனிய சக உறுப்பினர்களே! நான் மாகாணசபை அரங்கத்தினுள் முதன் முதலில் காலடி எடுத்து வைத்த போது அவைத்தலைவர் உள்ளடங்கிய உங்கள் ஒவ்வொருவர் மீதும் எனக்கிருந்த அன்பை நான் இன்றும் பறி கொடுத்து விடவில்லை. மத்தியில் வந்த உறுப்பினர்கள் மீதும் என் அன்பு நிலைத்தே இருக்கின்றது. நான் தொடர்ந்தும் யாழ்.மண்ணிலேயே குடியிருக்கவுள்ளேன். என்னை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வந்து சந்திக்கலாம். சுற்றி நடப்பனவற்றை அறிந்து கொள்ள எப்போதும் ஆவலாய் இருப்பேன். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் இலக்குகளை, ஆசைகளை, அபிலாஷைகளை அடைய இறைவன் அருள் புரிவானாக! அன்புடன் உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

**நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்**




## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

# நயவஞ்சக நரி



ஒரு காட்டில் நரி ஒன்று இருந்தது. ஒரு முறை அதற்கு நிறைய உணவு ஒரே வேளையில் சாப்பிட வேண்டுமென்று விரும்பிற்று. அதற்கான தருணம் எப்போது வாய்க்கப் போகிறதோ என்று காத்துக் கொண்டிருந்தது.

மரத்தின் நடுவிலுள்ள பொந்து ஒன்றில் அது மிகவும் நல்லவனைப் போல வசிக்க ஆரம்பித்தது. மனதுக்குள் இந்த மரத்தில் கூடு கட்டி வரும் பறவைகள் குஞ்சு பொரித்தால் குஞ்சுகளை அப்படியே சாப்பிட்டு விடலாமே என்றெண்ணிற்று நரி.

அதன் எண்ணம் வீண் போகவில்லை. இரண்டு கழுகுகள் கணவன், மனைவியாக ஒரு நாள் அம்மரத் தடிக்கு வந்தன. மரப் பொந்தில் மிகவும் சாது மாதிரி படுத்துக் கிடக்கும் நரியைப் பார்த்தன.

"நரியாரே! நீ இம்மரப் பொந்தில் எவ்வளவு நாளாக இருக்கிறீர்?" என்று கேட்டது ஆண் கழுகு.

"கழுகாரா! வாங்க! கூட யாரு? மன்னியா?" என்று கேட்டது. "ஆமாம்!" "நான் கேட்டதற்கு நீர் இன்னமும் பதில் சொல்லவில்லையே!" என்று கேட்டது.

"ஆமாம்! இம்மரப் பொந்தில் பல வருடங்களாக இருக்கிறேன்! ஏன் கேட்கிறீர்?" என்று கேட்டது நரி.

"என் மனைவிக்கு பிரசவ காலம் நெருங்குகிறது. இம்மரத்தில் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கலாமா? என்று ஒரு ஆசை!" என்றது ஆண் கழுகு.

"ரொம்ப ராசியான மரம் இது. முன்பு கூட ஒரு பருந்து இங்கு கூடு கட்டி, குஞ்சு பொரித்து, சுகமாக வாழ்ந்தது!" என்றது நரி.

"ஆபத்து ஏதாவது உண்டாகுமா?" என்று கவலையோடு கேட்டது பெண் கழுகு.

"நான் வயதானவன். இந்த பொந்தே கதி என்று கிடக்கிறேன். நீங்கள் பயப்படவே வேண்டாம். நாம் நல்ல நண்பர்களாக இருப்போம்!" என்றது நரி.

பிறகு மரத்தை அண்ணாந்து பார்த்து மூன்று கிளைகள் பிரியும் ஒரு இடத்தை சுட்டிக் காட்டி, "அங்கு கூடு கட்டிக் கொள்ளுங்கள். மிகவும் வசதியாக இருக்கும்!" என்றது.

ஆண் கழுகும் பெண் கழுகும் அங்கு சென்று கூடு கட்ட ஆரம்பித்தன. ஆண் கழுகு வெளியில் இரை தேடிச் செல்லும் பொழுது, "என் மனைவி மட்டும் கூட்டிலிருக்கிறாள். அவளால் பறக்க முடியவில்லை! இன்றோ, நாளையோ முட்டை இடப்போகிறாள். கொஞ்சம் பார்த்துக் கொள்ளும் நரியாரே!" என்றது.

"கவலைப்படாமல் போய் வாரும் நண்பரே! நான் இங்கிருக்கும் வரை எந்த ஆபத்தும் அண்டாது!" என்றது நரி. நமக்கு நல்ல நண்பன் கிடைத்தான் என்றெண்ணி இரை தேட பறந்து சென்றது ஆண் கழுகு. பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்து அவை சுமாராக பெரிதானதும் எல்லாவற்றையும் சாப்பிட்டு விட வேண்டுமென்று நரி எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது மரத்தடியில் புதிதாக வந்த பன்றியும் அதன் கொழு கொழு குட்டிகளும் அதன் பார்வையில் பட்டன.

பன்றிக் குட்டிகளை சாப்பிட்டு பல நாள் பசியாறலாம் போலிருக்கிறதே என்றெண்ணிற்று நரி. மேலே கழுகு குஞ்சுகள், கீழே பன்றிக் குட்டிகள் பேஷ் பேஷ் "நரியாரே இந்த மரத் தடியில் நானும் என் குட்டிகளும் தங்கலாமா?" என்று கேட்டது அம்மா பன்றி. "தாராளமாக தங்கலாம்!" என்றது நரி.

"எனக்கும், என் குட்டிக்கும் ஏதாவது ஆபத்து வருமா நரியாரே?" என்று கவலையோடு கேட்டது அம்மா பன்றி.

"நான் இருக்கும் இடத்துக்கு வந்துவிட்டாய் பன்றியே, கவலையே படாதே! நான் வயதானவன். இந்த பொந்தே கதி என்று கிடப்பவன்! எதிரிகள் எவரையும் மரத்தருகில் அண்டவே விடமாட்டேன்! நானிருக்க பயமேன்?" என்றது நரி.

பன்றி தன் குட்டிகளுடன் மரத்தடியில் தங்கிக் கொண்டது. நாளடைவில் மரத்தின் மேலுள்ள கூட்டில் பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்தது. நான்கைந்து குஞ்சுகள் இருக்கும். கத்தியபடி இருந்தன. மரத்தடியில் பன்றிக் குட்டிகளும் "கர், கர்" என்று உறுமியபடி உலாவிக் கொண்டிருந்தன.

வந்ததற்கு இப்போது பன்றிக் குட்டிகள் மிகவும் பருத்திருந்தன. அம்மா பன்றியும் தான். அவைகளை எப்படி சாப்பிடலாம் என்று யோசித்த நரி, ஆண் கழுகையும் பெண் கழுகையும் அழைத்தது.

"இதோ பாருங்கள்! மரத் தடியில் இருக்கிறதே பன்றி அது சுத்த மோசம் உங்கள் குஞ்சுகளை எப்பொழுது சாப்பிடலாமென்று தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது!" என்றது.

இரண்டு கழுகுகளும் இரை தேடக்கூட வெளியில் செல்லாமல், கூட்டிலுள்ள குஞ்சுகளை காவல் காக்கத் தொடங்கின. வெளியே எங்கேயும் போக பயந்தன. மேலே ஒருமுறை பார்த்து விட்டு குட்டிகளுடன் மேய்ந்து கொண்டிருந்த பன்றியிடம் வந்தது நரி.

"பன்றியே! நீ உன் குட்டிகளை மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலே இருக்கிற இரண்டு கழுகுகளும் மகா பொல்லாத கழுகுகள். அவை நீ இல்லாத சமயத்தில் உன் குட்டிகளைக் கொத்திக் கொன்று சாப்பிட்டுவிட நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன!" என்றது நரி.

பன்றி ஒரேயடியாக பயந்து போய்விட்டது. குட்டிகளை எல்லாம் தன் காலின் கீழ் அழைத்துக் கொண்டது. மரத் தடியிலேயே இருக்க வேண்டும். குட்டிகளை தனியாக விட்டு விட்டு போய் விடக் கூடாது. கழுகுகள் சாப்பிடவா என் குட்டிகளை கண் போல வளர்க்கிறேன் என்றெண்ணியது பன்றி. அதன் பிரகாரமே இருக்கவும் ஆரம்பித்தது அம்மாப் பன்றி. ஆண், பெண் கழுகுகளும் அம்மா பன்றியும் பன்றிக் குட்டிகளும் இரை தேடாததால் வாடி இளைத்து, சோர்ந்து, துவண்டு ஒரு நாள் எல்லாமே இறந்து போயின. நரி விரும்பியதுபோல் நிறைய சாப்பிட கழுகுகளும் பன்றிகளும் அதன் தந்திரத்தால் கிடைத்துவிட்டன.

யார் யாரிடம் நட்பு கொள்ள வேண்டுமென்று யோசித்து நட்புக் கொள்ளாததால் கழுகுகளுக்கும் பன்றிகளுக்கும் நேர்ந்த பரிதாபமான முடிவைப் பார்த்தீர்களா, நல்லவர்களோடு மட்டுமே நட்பு கொள்ள வேண்டும்.

## நான் நூலகத்தில் பெற்ற அனுபவங்கள்

எனக்கு என் நண்பன் தேசிகன் மூலமாக கொக்குவில் பொது நூலகம் அறிமுகமானது. இங்கு சித்திர வகுப்புக்கள் நடைபெறுவதாகவும் அதில் என்னைக் கலந்து கொள்ளுமாறும் என்னை இந்த நூலகத்திற்கு அழைத்துவந்தான். அன்று நான் வரும் போது சித்திர வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அன்று வகுப்பில் என் நண்பனைத் தவிர எனக்கு வேறு எவரையும் தெரியாது. சனி, ஞாயிறு தினங்களில் கொக்குவில் நூலகத்தில் நடைபெறும் சித்திர வகுப்பில் நான் தொடர்ச்சியாக கலந்து கொண்டேன். அங்கு இருந்த ஏனைய சிறுவர்கள் எனக்கு நன்கு பழக்கமானார்கள். பின்னர் நான் கொக்குவில் பொது நுலகத்திற்கு அடிக்கடிசெல்லத்தொடங்கினேன். சிறுவர் தினத்தன்று நானும் எனது நண்பர்களும் சேர்ந்து நாடகம் நடித்தோம். அதைப் பார்த்த அனைவரும் கைதட்டினர். பின்னர் பல சிறுவர்கள் பல நிகழ்ச்சிகளை செய்தனர். பிறகு எல்லோருக்கும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. இச் சிறுவர்தின நிகழ்வில் பங்குபற்றியது எனக்கு ஒரு சிறந்த அனுபவத்தை பெற்றுத்தந்தது. எனக்கு நண்பர்கள் வட்டம் இன்னும் அதிகமாகியது. எனக்கிருந்த மேடைப் பயத்தை போக்கி இன்று பல நிகழ்வில் முதன்மையாக பங்கு பெற இந் நிகழ்வு எனக்கு சிறந்த முன்னோடியாக இருந்தது.

நான் கொக்குவில் பொது நூலகத்தில் பல்வேறுபட்ட நூல்களை காண்கிறேன். இந் நூலகத்தில் புதிதாக அதிக நூல்கள் வருகின்றன. நான் அதிக புத்தகங்களை வசிட்டதால் உலகை பற்றி பரந்துபட்ட அறிவைப் பெற முடிகிறது.

இந் நூலகத்திற்கு வந்த பின் என் எண்ணங்களும் செயற்றிறனும் விருத்தி அடைவதோடு இங்கு நடக்கும் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளில் பங்குபெறுவதால் தலைமைத்துவம், ஊக்கம், நிகழ்ச்சிகளில் பங்குபற்றி பரிசு பெறவேண்டும் என்ற எண்ணம் போன்றனவும் எனக்கு ஏற்பட்டுள்ளது. எனவே என் போன்ற ஏனைய சிறுவர்களும் இத்தகைய அருமையான நூலகத்தை பயன்படுத்துவதுடன் இங்கு நடைபெறும் சிறுவர் நிகழ்வுகளிலும் தொடர்ச்சியாக பங்குபற்றி அனைவரும் பயன்பெற வேண்டும் என் என்போன்ற சிறுவர்களை கேட்டுக்கொள்கிறேன்.



வெ.திலக்ஷன்
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில் பொது நூலக வாசகர்.

தொகுப்பு:- கொக்குவில் பொது நூலகம்

குடை நிழலில் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பார்த்தியளோ மக்காள் எல்லாம் வரும் என்று சொன்னார்கள்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் நேற்று 26ஆம் திகதி நடந்த அதிரடி மாற்றம் முன்னர் ஒருபோதும் நடந்ததில்லை எனலாம்.

அந்தளவுக்கு இலங்கை அரசியலில் அதிர்ச்சியும் அதிசயமுமான நிகழ்வாக பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட்டு மகிந்த ராஜபக்ஷ பிரதமராக்கப்பட்டுள்ளார்.

இந்த மாற்றம் அதிரடியானது என்பதற்கப்பால், மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதென்பது இங்கு கவனிக்கத்தக்கது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு அவரின் கடுமையான விமர்சனம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நோக்கியதாகவே இருந்தது.

மைத்திரியும் மகிந்தவும் இணைய முடியாத இரு துருவங்கள் என்ற நிலைப்பாடு அரசியலில் மாற்ற முடியாதது என்றே கருதப்பட்டது.

ஆனால் அரசியலில் இப்படியும் நடக்கலாம். இதைவிட இன்னும் நடக்கலாம் என்பது போல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷவை நேற்றைய தினம் பிரதமராக நியமித்து அவருக்குச் சத்தியப்பிரமாணமும் செய்து வைத்துள்ளார்.

இதில் அதிசயம் என்னவென்றால், இலங்கைத் திருநாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தர் இடம்பெற்றிருக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இம்மையும் மறுமையும் தெரியாததுதான்.

அஃதென்ன! இம்மை மறுமை என்று கேட்டால் விடிந்ததும் பொழுதுபட்டதும் தெரியாத நிலையிலேயே கூட்டமைப்பு இருந்துள்ளது.

அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் அரசியலமைப்பு வரும் என்று கூட்டமைப்பு கூறியிருந்தது. தமிழ் மக்களும் நம்பியிருந்தனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சரிவரும் என்றார் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

ஆனால் அவையெல்லாம் வெற்று வார்த்தைகள் என்பதாக நிலைமை முடிந்து போனது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகளை நிறைவேற்ற காலஅவகாசம் கொடுக்கக் கூடாது என்று தமிழ் மக்கள் கூறினர்.

அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கூட்டமைப்புக் கூறியது. இப்போது செம்பும் போய் பையும் போன கதையாக நிலைமை ஆகிவிட்டது.

என்ன செய்வது! தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர், இவர் என்று கன்னை பிரிந்து நின்றதால் வந்த வினை.

ரணில் விக்கிரமசிங்கவை நம்பி அவருக்கு ஆதரவாக நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பற்றி இம்மியும் கருத்திலெடுக்கவில்லை.

இன்று நிலைமை அடியோடு மாறிவிட்டது. இனி எங்கள் நிலைமை எவ்வாறு என்பதை மீண்டும் காத்திருப்பில் விடவேண்டியதுதான்.

# 'கம்பனிகளின் அறிவிப்பை ஏற்க முடியாது' போராட்ட வடிவம் மாறும் என எச்சரிக்கை

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில், கம்பனிகளின் இறுதி முடிவை ஏற்க முடியாது என, திட்டவட்டமாக அறிவித்துள்ள தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படாவிட்டால், போராட்ட வடிவம் மாறும் என்றும் எச்சரித்துள்ளன.

கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் தொழிற்சங்களின் ஊடகவியலாளர் சந்திப்பு, சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் பிரதியமைச்சில், நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ், கூட்டுக் கமிட்டியின் தலைவர் எஸ். இராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டு, கூட்டாக இதனைத் தெரிவித்தனர்.

பெருந்தோட்டக் கம்பனிகளின் முடிவை தாம் நிராகரிப்பதாகவும், முதலாளிமார் சம்மேளனத்துடன் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் தொழிற்சங்கங்கள் இணைந்து மேற்கொள்ளும் தீர்மானமே இறுதியானது என்றும் தெரிவித்த ஆறுமுகன் எம்.பி, ஒரு தரப்பின் முடிவை, இறுதித் தீர்வாக கருத முடியாது என்றும் தெரிவித்தார். 2016ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம், கடந்த 15 ஆம் திகதியோடு முடிவடைந்திருந்தாலும், கூட்டு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் முடிவடையும்வரையில், பழைய கூட்டு ஒப்பந்தத்தில குறிப்பிடப்பட்ட சம்பளத் தொகை வழங்கப்பட்டு வரும் என்றும, இடைப்பட்ட காலத்துக்கான நிலுவைத் தொகையையும் பெற்றுக் கொடுப்பதாகவும், அவர் மேலும் உறுதியளித்தார். (இ-7)

# உலக சந்தையில் எரிபொருள் விலை வீழ்ச்சி

உலக சந்தையில் தற்போது எரிபொருள் விலை வேகமாக குறைந்து வருகிறது.

2018 ஒக்ரோபர் 05 முதல் இன்று வரையான கடந்த 21 நாட்களில் ப்ரெண்ட் மசகு எண்ணெய் பெரல் ஒன்று 84.47 டொலரில் இருந்து 76.77 டொலர் வரையிலும், ஒபெக் பாஸ்கெட் மசகு எண்ணெய் பெரல் ஒன்று 84.09 டொலரில் இருந்து 75.04 டொலர் வரையிலும் குறைவடைந்துள்ளது.

இது தவிர சுத்திகரிப்பு செய்யப்பட்ட எரிபொருளின் விலையும் இந்த காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்துள்ளது.

சிங்கப்பூர் சந்தையில் பெட்ரோல் பெரல் ஒன்று 91.85 டொலரில் இருந்து 79.10 டொலர் வரையில் நூற்றுக்கு 13.88 வீதத்தாலும் டீசல் பெரல் ஒன்று 98.44 டொலரில் இருந்து 90.34 டொலர் வரையில் நூற்றுக்கு 8.23 வீதத்தாலும் மண்ணெண்ணெய் பெரல் ஒன்று 98.35 டொலரில் இருந்து 91.78 டொலர் வரையில் நூற்றுக்கு 6.68 வீதத்தாலும் குறைவடைந்துள்ளது. (ம)

## தொண்டமான், டக்ளஸ் மகிந்தவுக்கு ஆதரவு

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஈ.பி.டி.பியின் பொதுச்செயலாளர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இ.தொ.க வின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் ஆதரவு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ நேற்று இரவு பிரதமராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டிருந்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அவர் பிரதமராக பதவி பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இந்நிலையில்ஏற்கெனவே அரசாங்கத்தில் இருந்த இரண்டு முஸ்லிம் கட்சிகள் மகிந்தவிற்கு ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஜனாதிபதி கொலைச்சதி 89 பேரிடம் வாக்குமூலம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படும் சதித்திட்டம் தொடர்பில் இதுவரையில் 89 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர்களிடம் குற்றப்புலனாய்வு திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக, பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

அவர்களுள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் உட்பட 47 பொலிஸார் உள்ளடங்குகின்றதாக அவர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த கொலை முயற்சி சதித்திட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பயங்கரவாத தடுப்பு பிரிவின் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக்க டி சில்வா எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இராணுவ பாதுகாப்பு வழங்குக – மைத்திரி

அனைத்து அரச ஸ்தாபனங்களிற்கும் இராணுவ பாதுகாப்பை வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றுள்ளதை தொடர்ந்து உருவாகியுள்ள குழப்ப நிலைக்கு மத்தியில் ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (ம)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில மருதனார்மடம் ஒருபகுதி, சுன்னாகம் இலங்கை வங்கி பிரதேசம், அம்பலவாணர் வீதி, யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீட பிரதேசம், குருநகர், பழைய பூங்கா வீதியின் ஒரு பகுதி, பாசையூர், கொழும்புத் துறை வீதியின் ஒருபகுதி, இலந்தைக் குளம், புங்கங்குளம் வீதி, சந்தனமாதா கோவில் வீதி, வலன்புரம், துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், கெலன்தோட்டம், பெரிய தோட்டம், உதயபுரம், குருசோ வீதி, அச்சுக்கூட வீதி, பிரதான வீதியின் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## தொழிலில் வெற்றி பெற...

- தரமான பொருட்களையே தயார் செய்யுங்கள்.
- வாடிக்கையாளர்களை மனதில் கொண்டு வியாபாரத்தைத் தொடருங்கள். உங்களின் பொருட்களின் மீது யாரேனும் குறைகளைச் சொன்னால் அதனைச் சரிசெய்ய முயலுங்கள். வீணாக வாதாடாதீர்கள்.
- குறித்த நேரத்தில் டெலிவரி செய்யுங்கள். நேரம் தவறாமையைக் கருத்தில் வையுங்கள்.
- நேர்மையான வழிகளையே பின்பற்றுங்கள். தங்களின் பொருட்களை விற்பதற்காக பிறர் பொருட்களை (விமர்சனம்) குறைகூறுவதைத் தவிர்த்து நாளும் முன்னேற வேண்டும் என்கிற எண்ணத்துடன் தொழிலை வெற்றிப் பாதையில் நகர்த்துங்கள்.
- நமது கடமை ஒன்றே கைகொடுக்கும் என்று அறிந்து செயலாற்றுங்கள்.
- வெற்றிக்கு உரிமை கொண்டாடும் மனம் தோல்விக்கு மட்டுமே சோர்ந்து விடுவது ஏன்? என்பதை அறிந்து தொழிலை நடத்துங்கள்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- இதயம் விரிவடைந்தால் தான் உண்மை ஞானம் உதிக்கும். உண்மை ஞானம் மலர்ந்தால் மனதில் நம்பிக்கை நிலைக்கும்.
- பொன், பொருளில் ஆசை கொண்டு அற்ப வாழ்க்கை நடத்துபவர்கள் பொருட்படுத்தக் கூடியவர்கள் அல்ல.
- யாருடைய நெஞ்சம் ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ அவரே மகாத்மா.
- கோழைகளே பாவச் செயல்களைச் செய்வர். தைரியம் கொண்ட மனிதர்கள் ஒருக்காலும் பாவம் புரிய நேர்வதில்லை.
- வஞ்சனையால் பெரிய விஷயம் எதையும் வாழ்வில் சாதித்து விட முடியாது.
- அறிவைப் பலவீனப்படுத்தும் எந்த விடயமாக இருந்தாலும் அதை விஷம் எனக் கருதி ஒதுக்குங்கள்.
- உண்மை உங்களை எங்கே இழுத்துச் சென்றாலும் அதைப் பின்பற்றிச் செல்லுங்கள். ஒருபோதும் கோழையாகவோ, கபடதாரியாகவோ இருக்காதீர்கள்.
- நிச்சயமாக நன்மை விளையும் என்று உணர்ந்தால் மட்டுமே மனதில் இருப்பதை வெளிப்படுத்துங்கள்

# நாவாந்துறை றோ.க.சம்பியனாகியது



இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில், 16 வயது ஆண்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்கு அணிகளைத் தெரிவு செய்வதற்காக, மாவட்ட ரீதியிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியானது தற்போது நடைபெற்று வருகின்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற இந்தச் சுற்றுப்போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாசாலையை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது. இதில் நாவாந்துறை றோ.க அணி, 1:0 என்ற கோல் கணக்கில் வென்று மாவட்டச் சம்பியனாகியதுடன், தேசிய மட்டப் போட்டிகளுக்கும் தகுதி பெற்றது. (க-26)

# பத்மநாதன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி



கிறாஸ்கொப்பர்ஸ் அணியின் முன்னாள் கால்பந்தாட்ட பயிற்றுநர் ரி.பி.பத்மநாதன் ஞாபகார்த்தமாக நடத்தப்படவுள்ள கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றுப்போட்டி கடந்த இரண்டு ஆண்டுகளாக, வலிகாமம் லீக்கின் ஒழுங்கமைப்பில் நடத்தப்பட்டு வந்து, சில குழப்பங்களால் இம்முறை யாழ்ப்பாண லீக்கின் ஒழுங்கமைப்பில், ராஜகாந்தன், தர்மகுலசிங்கம் மற்றும் மோகன்ராம் ஆகியோரின் அனுசரணையில் நடைபெறவுள்ளது.

இந்த சுற்றுப்போட்டி தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு அரியாலை காலப்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது, யாழ்ப்பாண லீக்கின் தலைவரும் மாநகர முதல்வருமான இமானுவல் ஆனல்ட் மேற்படி விடயங்களை தெளிவுபடுத்தினார்.

யாழ்ப்பாண லீக்கைச் சேர்ந்த 16 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியானது, 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று இறுதிப்போட்டியானது 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

சம்பியனாகும் அணிக்கு 50 ஆயிரம் ரூபாயும், இரண்டாமிடம் பெறும் அணிக்கு 25 ஆயிரம் ரூபாயும் பரிசுத் தொகை வழங்கப்படுவதுடன், இறுதிப்போட்டியில் மோதும் இரண்டு அணியிலும் இருந்து தலா ஒரு சிறந்த வீரர் தெரிவு செய்யப்படுவார். (க-26)

# சிறப்பான ஒழுங்கமைப்பால் கிண்ணத்தை வென்ற யங்ஹென்றிஸ்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, வடமாகாண ரீதியில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டு வந்தது.

24 அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிக்கு இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியும் தகுதி பெற்றன.

இறுதிப்போட்டி கடந்த24 ஆம் திகதி இரவு நடைபெற்றது. போட்டியின் முதல் கோலை யங்ஹென்றிஸ் அணி அடித்தது. அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அடுத்த நிமிடத்திலேயே றேஞ்சர்ஸ் அணி பதில் கோலைப் போட்டது. முதற்பாதியாட்டம் முடிவடைய சில நிமிடங்கள் இருக்கையில் யங்ஹென்றிஸ் அணி அடுத்த கோலையும் போட்டது.

இரண்டாவது பாதியாட்டத்தில் மேலும் ஒரு கோலைப் போட்டு, வெற்றியை உறுதி செய்த யங்ஹென்றிஸ் பிற்பகுதி நேரத்தில் தடுப்பு ஆட்டத்தை மேற்கொண்டது. முடிவில் யங்ஹென்றிஸ் அணி, 03:01 என்ற கோல்கள் கணக்கில் வென்று சம்பியனாகியது.

யங்ஹென்றிஸ் அணி சார்பாக சுமன், மகீபன் மற்றும் ஞானரூபன் ஆகியோர் தலா 1 கோல்களையும், றேஞ்சர்ஸ் அணி சார்பாக ஆர்த்திகன் ஒரு கோலையும் அடித்தனர்.

தொடர்நாயகன், இறுதிப்போட்டி நாயகன் மற்றும் சிறந்த கோல் காப்பாளர் ஆகிய விருதுகளை யங்ஹென்றிஸ்அணியைசேர்ந்தமுறையே இக்னி, ஞானரூபன் மற்றும் அமல்ராஜ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (க-26)

# இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான துடுப்பாட்டம்; தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வெற்றி

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் ஒழுங்கமைத்து நடத்தும் 13 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியொன்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி, 54 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரி.பவிதரன் 33 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சார்பாக, ரி.விதுசியன் 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸினைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, 12.3 ஓவர்களில் வெறும் 16 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது.

யூனியன் கல்லூரி சார்பாக பந்துவீச்சில் அபாரமாகச் செயற்பட்ட ரி.பவிதரன் 3 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும், வி.விருசிகன் 5 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து பலோ ஒன் முறைக்குத் தள்ளப்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, இரண்டாவது இனிங்ஸினையும் மீண்டும் துடுபெடுத்தாடக் களமிறங்கியது. ஆட்ட நேரம் முடியும் போது, 33 ஓவர்களை எதிர்கொண்டு 7 விக்கெட்களை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எம்.தெய்வீகன் 17 ஓட்டங்களையும், பி.யதுசன் 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்".

பந்துவீச்சில் யூனியன் அணி சார்பாக ரி.பவிதரன் 16 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும் கைப்பற்றினர். முதல் இனிங்ஸில் முன்னிலை பெறும் அணி வெற்றிபெற்ற அணியாகக் கொள்ளப்படும். போட்டி விதிமுறைக்கமைய யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (க-26)







மல்லாகம், கோட்டைக்காடு சிறி முருகன் விளையாட்டுக்கழகத்தின் 45ஆவது ஆண்டுவிழாவும், ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் கடந்த புதன்கிழமை விளையாட்டுக் கழகத்தலைவர் தலைமையில் கழக மைதானத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் க.தர்ஷன் மற்றும் எந்திரி சர்வராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் ஆண்டுவிழா நிகழ்ச்சிகள், மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றதுடன், ஆண்டுவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டி யவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன. (க)

## தகவல் அறியும்...

குறித்த மையத்தை அமைக்குமாறு ஆளுநர் கூறியுள்ளார்.

இதன்மூலம் வடக்கு மாகாண விவசாயிகள் நாட்டின் முக்கியமான சந்தைகளில் தமது உற்பத்திப் பொருட்களின் விலையினை அன்றாடம் தெரிந்து கொண்டு தமது உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்யும் நிலை ஏற்படுமென ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணசபை ஆட்சி முடிவடைந்ததன் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் விவசாய அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளை சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் பணிமனையில் சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பின் போதே அவர் மேற்படி பணிப்புரையை விடுத்துள்ளார்.

வட மாகாணத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடி என்பன பிரதானமானது. அந்த வகையில், விவசாயத்தினை ஊக்குவிப்பதற்கும் விவசாயிகளின் உற்பத்திப்பொருட்களை நஷ்டம் ஏற்படாது விற்பனை செய்வதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆளுநர் கேட்டறிந்தார்.

மேலும் விவசாயிகள் நலன்சார்ந்த விடயங்களுக்கு அமைச்சின் அதிகாரிகள் முன்னுரிமை வழங்க வேண்டுமென ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, விவசாய அமைச்சில் காணப்படும் பணி வெற்றிடங்களை உரியமுறையில் விரைவாக நிரப்ப வேண்டுமென்றும், விவசாய அபிவிருத்திக்கான எதிர்காலத் திட்டங்களை தயார்படுத்தி தம்மிடம் சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் தெரிவித்துள்ளார். (ம)

## ஜனாதிபதி மைத்திரி...

ஈடுபட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

நேற்று இரவு மகிந்த ராஜபக்ஷ பிரதம ராக பதவியேற்றதையடுத்தே மேற்படி பேச்சுவார்த்தை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(ம)

## சமகால அரசின் பிரதமர்...

சிறிசேன தெரிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மகிந்தவுக்கு அவ்வாறு பிரதமர் பதவி வழங்க முடியாது. அது சட்டவிரோத செயல் என ரணில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை நிரூபித்து காட்டுவேன் என ரணில் பகிரங்கமாக சவால் விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.(ம)

## கூட்டு எதிர்க்கட்சிக்குள்...

கூட்டு எதிர்க்கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க தரப்பினர் கூறினாலும் அப்படியான எந்த பிரச்சினைகளும் இல்லை எனவும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை கண்டிக்கவில்லை என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மகிந்த கண்டிப்பதற்கு எதுவுமில்லை.

இதேவேளை, எமது கட்சியில் இருக்கும் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை புரிந்திருக்க வேண்டும்.

எனினும் குமார வெல்கம கூட்டு எதிர்க் கட்சியில் இருந்து விலகி செல்வதாக எந்த கருத்துக்களையும் வெளியிடவில்லை என மகிந்த கூறியுள்ளார். (ம)

## பெரும்பான்மையை...

கூறினார்.

நாட்டின் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ள நிலையில், ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுடன் அவசர சந்திப்பில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தனது பதவியை வேறு யாராலும் மாற்ற முடியாது என்றும் பெரும்பான்மை தனக்கே உள்ளது எனவும் கூறினார்.

அத்துடன் நாடாளுமன்றம் மற்றும் அரசியலமைப்பின் பிரகாரம் தானே பிரதமர் என்பது உறுதியாகியுள்ளதாகவும் அதனை மீறி செயற்பட்டால் அது அரசியலமைப்பிற்கு விரோதமானது என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையை வெற்றி கொண்டதன் மூலம், பெரும்பான்மையினை உறுதி செய்திருந்தேன்.

இருப்பினும் யாராவது பெரும்பான்மையை உறுதி செய்ய எண்ணினால் மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து வெற்றி பெற்று காட்டட்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க சவால் விடுத்துள்ளார். (ம)

## அரசியல் அதிரடி...

இலங்கையில் ஜனாதிபதியாக இலங்கை சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன பதவி வகிக்கின்ற போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக பதவி வகித்தார்.

இதேவேளை எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பிலும் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளது.

குறித்த அறிவிப்பினை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர அறிவித்துள்ளார். மேலும் விலகுவது குறித்த கடிதத்தை அவர் சபாநாயகருக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றுள்ளார். (ம)

## சம்பந்தனின் எதிர்க்கட்சி...

ப்பு தற்போது தமது எதிர்க்கட்சி அந்தஸ்த்தை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றுள்ள நிலையில் எதிர்க்கட்சியின் அடுத்தக் கட்ட நகர்வு என்ன என்பது அவதானிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தனது பதவியை துறக்க நேரிடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

நேற்று இரவு மகிந்த பிரதமராக பதவி பெற்றது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்த போது பலனளிக்கவில்லை. (ம)

## பதவி நீக்கப்பட்டதை...

அமைய பிரதமர் பதவியில் இருந்து உடனடியாக நீக்கியுள்ளதாகவும்,

புதிய பிரதமரை நியமித்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (ம)

## ஜனாதிபதி செயலகத்தை...

செயலகத்தை சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பெருமளவிலான பொலிஸார் ஜனாதிபதி செயலகத்தை சுற்றி குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு கடமைகளில் முப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் மகிந்தவின் ஆதரவாளர்கள் பெருமளவிலானோர் திரண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

# அமைச்சரவையில் பங்கேற்க சிறுபான்மை கட்சிகளுக்கு

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அழைப்பு

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை உள்ளடக்கிய புதிய அமைச்சரவையில் பங்கேற்குமாறு சிறுபான்மைக் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

முன்னாள் அமைச்சர்கள் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ரவூக் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டக்ளஸ் தேவனாந்தா, ஆறுமுகம் தொண்டமான் ஆகியோருக்கும் இந்த அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராகக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு நாடாளுமன்றில் 96 ஆசனங்களை மட்டும் கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி 105 ஆசனங்களைக் கொண்டுள்ளது. இந்த நிலையில் சிறுபான்மைக் கட்சிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி தம் பக்கம் இழுக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முயற்சித்துள்ளது. (ம)

# நேற்று பிற்பகல் தம்முடன் இணைய மகிந்த என்னை அழைத்திருந்தார்

## ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

நேற்றைய தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மகிந்த ராஜபக்ஷ தம்முடன் இணைந்து கொள்ளுமாறு தனக்கு அழைப்பு விடுத்தார் என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நானும் மங்கள சமரவீரவும் நாடாளுமன்ற உணவகத்தில் உணவு உட்கொண்டிருந்த போது மகிந்த எமது அருகே வந்தார்.

ஹர்ஷ மூன்றரை ஆண்டுகள் இந்த அரசாங்கத்தில் இருந்தது போதும் வாருங்கள் எங்களுடன் என்று கூறினார் மகிந்த. நான் அதனை பகிடியாகவே எடுத்துக்கொண்டேன்.

எனினும், இவர்கள் ஏற்கெனவே திட்டமிட்டுள்ளார்கள் என்பது எனக்கு அப்போது புரியவில்லை.

இந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவேயாகும்.

19ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்து கொண்டமை சட்டவிரோதமானது.

நான் சட்டத்தரணி கிடையாது என்றாலும் எனது அரசியல் அமைப்பு ஞானத்திற்கு அமையயே இதனைக் குறிப்பிடுகின்றேன் என கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். (ம)

# அரசியல்.நெருக்கடி குறித்து கட்சி தலைவர்களுடன் இன்று பேச்சு

## மாவை எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து இன்று கூடி தீர்மானிக்க உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு இதனை தெரிவித்துள்ளார். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சி தலைவர்களுடன் இது குறித்து இன்று பேசவுள்ளதாக அவர் கூறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பிரதமராக பதவியேற்றிருந்தார்.

இதனால் நாடு முழுவதும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து தற்சமயம் கொழும்பில் முக்கிய பேச்சு வார்த்தைகள் இடம் பெற்று வரும் நிலையில் மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அலரி மாளிகையில்...

பிரதமராக நியமித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இந்த ஆட்சிக்கவிழ்ப்பை நேற்றிரவு ஜனாதிபதி அரங்கேற்றினார்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் அடிப்படையில் பிரதமரை அமைச்சரவையின் முழுமையான எதிர்ப்பு அல்லது நாடாளுமன்றின் நம்பிக்கையில்லா பிரேரணையின் மூலமே நீக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கியதுடன், நடைமுறையிலிருந்த அமைச்சரவையையும் கலைத்தார்.

இந்த நிலையில் ஜனநாயகத்துக்கு முரணாகவும் அரசியலமைப்பை மீறியும் ஜனாதிபதி எடுத்த இந்த நடவடிக்கை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் விவாதித்து வருகின்றனர். (ம)

# சட்ட ஆலோசனையுடன் நடவடிக்கை

## சபாநாயகர் அறிவிப்பு

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பான சட்ட ஆலோசனையை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளதாக சபாநாயகர் கருஜயசூரிய அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளேன். இது தொடர்பான சட்ட ஆலோசனை பெற்றுக் கொள்வற்கான நடவடிக்கையையும் எடுத்துள்ளேன்.

அத்துடன் இது தொடர்பானதொரு விரிவான விளக்கத்தை இன்றைய தினம் அறிவிப்பதாக சபாநாயகர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.10.26 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1924 |

ஆங்கில எழுத்து: T — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 52 62 70 79

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2018/10/26 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3776 |

ஆங்கில எழுத்து: V — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 2 2 4 8 0 1

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 26/10/2018 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 297 |

வெற்றி எழுத்து: G — சுப்பர் இலக்கம்: 21 — வெற்றி இலக்கங்கள்: 08 58 72 76

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 2018-10-26 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 67 |

ஆங்கில எழுத்து: V — வெற்றி இலக்கங்கள்: 04 17 20 26

தேசிய லொத்தர் சபை

## அரசியலமைப்பு...

கூட்டு அரசிலிருந்து விலகுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்றிரவு திடீரென அறிவித்தது. இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பிரதமராகப் பதவியேற்றார்.

இந்த நியமனம் தொடர்பில் தனது டுவீட்டர் பக்கத்தில் மங்கள சமரவீர இவ்வாறு பதிவிட்டுள்ளார். (ம)


### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kg க்கான கட்டணம்

UK - 550/=, France - 700/= Germany - 650/= Swiss - 750/= Canada - 950/=

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528

திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்

321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.(முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. DHL aramex SKYNET
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார். (6121)

3 - 5 Working Days

### அமெரிக்க லொத்தர் விசா

2020-ம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம். (18 வயதுக்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)

2002-ம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வரும் இச்சேவையினூடாக 100க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உங்கள் அதிர்ஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்

தொடர்புகளுக்கு: 077 755 4528/ 070 375 0001-7

திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட் 321, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (6121)
திருநெல்வேலி, நெல்லியடி, முல்லைத்தீவு

### கட்டார் வேலைவாய்ப்பு

Telecom: FTTX ISP/OSP Supervisor, Surveyor, Technical Support Agent, Storekeeper, Lead Technician+Driver, Helper

Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

ஆரம்பக் கட்டணம் இல்லை
077 00 38 215
021 221 9 221
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk

221-1/1, மின்சார நிலைய வீதி, 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்


## தென்பகுதியில்...

பட்டாசுகளை வெடித்து தமது உச்சகட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் வடக்கிலும் சில பிரதேசங்களில் நேற்றிரவு பட்டாசுகள் வெடித்து மக்கள் தமது ஆரவாரத்தை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ரணில்...

இந் நிலையில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவி ஏற்றுக் கொண்டது அரசியல் அமைப்பிற்கு முரணானது என பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியல் அமைப்பின் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்க முடியாது எனவும் எனவே அவரே நாட்டின் பிரதமர் எனவும் அஜித் பெரேரா ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். (ம)


### ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

### Wanted Lady Staff

Admin Officer, Receptionist
A/L With computer skills
Walk in an interview on Tuesday (30.10.2018) at 10 O'clock
Office at
No.15,Sirambiyady Lane, (off stanley Rd)
2nd Floor (Top of LANKA SATHOSA), Jaffna.
(C-4242)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK – 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELS

●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை

### வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் டிஷ் ஆன்டெனா மற்றும் கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை மற்றும் சர்விஸ் செய்யும் நிறுவனத்துக்கு டிஷ் ஆன்டெனா பொருத்துநர் மற்றும் உதவி ஆட்கள் மற்றும் வேலை பழக விருப்பமுடைய நபர்கள் தேவை. திறமைக்கு ஏற்ப 25,000/= தொடக்கம் 50,000/= வரை சம்பளம் கிடைக்கும். உணவு, தங்குமிடம் இலவசம். குடும்ப பொறுப்புள்ள நிரந்தர வேலை தேவைப்படுவோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

Kumar - 077 771 0785
Sats tech Engineers (Pvt) Ltd
51/102, Wolfendhal Street, Colombo 13.
(C-4230)

### அமெரிக்க அதிஸ்ட விசா- இன்னும் 4 நாட்களே உள்ளன!

இதுவே இறுதி வருடம் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்துங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும்

55000 இலவச விசாக்கள்

0768226243

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

காலம் காலமாய் என்னை மதிக்காதவர்கள் என்னை கௌரவமாய் பார்ப்பதற்கு எனது அமெரிக்க அதிஸ்ட விசா காரணமாய் உள்ளது. இதற்கு ஏதோ ஒரு வகையில் ஊடகமாய் அமைந்த V2 TRAVELSக்கு எனது மனமார்ந்த நன்றிகள் .

2017 ல் எமக்கூடாக 77 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

உடனே விரையுங்கள்

கலைச்செல்வன் அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் அடுத்த வருடம் இல்லை

V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0768226241 | 0768226230 | 0776697960 |

# மாலை திருமாங்கல்ய திறப்பு விழா

## Maalai மாலை
## Matrimony Matrimony

நிகழும் மங்களகரமான விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 10-ம் நாள் இன்று (27.10.2018) சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் 9.00 மணிவரை உள்ள அமிர்தயோகமும் திருதியை திதியும் கார்த்திகை நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

கௌரவ யாழ்.மாநகரசபை முதல்வர்
**திரு.இம்மானுவேல் ஆனோல்ட்**
அவர்களால் வைபவரீதியாக திறந்து வைக்கப்படுகிறது

- இன்றே உங்கள் தொலைபேசியில் Maalai Appஐ டவுண்லோட் செய்யுங்கள்.
- பதிவு செய்த மறுகணமே உங்களுக்கு பொருத்தமான வரன்களை ஜாதகப் பொருத்தத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
- தரகுப் பணம் இன்றி பதிவுக் கட்டணத்துடன் முழுமையான பயனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- வீட்டில் இருந்தவாறே சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.




www.maalai.com

பருத்தித்துறை வீதி, இருபாலை சந்தி, இருபாலை.
021 222 3550, 070 379 3999

GET IT ON Google Play
(6476)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.